# "பரம்பொருள்" & "பத அர்த்தம்"!





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "பரம்பொருள்"!
# &
# "புது அர்த்தம்"!

## பொருளடக்கம்

1. பரம்பொருள் -------------------------------------------------------- 2

2. ஜீவன் -------------------------------------------------------------- 25

3. பத அர்த்தம் -------------------------------------------------------- 39

எல்லாம் நீ!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

"ஸத் குரு திருவடி துணை"!
"நம்பினோர் கெடுவதில்லை"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம்"!

"ஓம்"

"அகம்பிரம்மம், ஜெகம் பிரம்மம்,
அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும்,
சிறிதும் இல்லை!"

"யத் பாவம் தத் பவதி"!
"தெய்வம் மனுஷ்யாரூபம்!



# "பரம்பொருள்!"

காலம்! தேசம்! வர்த்தமானம்! நாமம்! ரூபம்! குணம்! குறி! மனம்! வாக்கு! காயம்! ஆகிய இவை "பத்தையும்" கடந்ததே, "பரம்பொருள்!" அதாவது, இந்த பத்திலையும், இன்னதென, "சுட்டிக் காட்டவோ," "தொட்டு உணர்த்தவோ" விளக்க முடியாத, ஒன்றும்! இதுவா? அதுவா? இதுவா? அதுவா? என என்ற விளக்கிலையும், "இல்லை! இல்லை! இல்லை!" இல்லையென, நேதி செய்து, முடிவில், தள்ள முடியாத ஏதுவோ அதுவே அந்த ஒன்றும்! அதாவது, வெங்காயம் (உள்ளி) என்ற ஒன்றை, ஓர் மேஜை மீது வைத்து, இது என்ன எனக் கேட்டால், அதை, எவரும், வெங்காயம் என சொல்வர். அதை உன் கையால், உரித்துப் பார் என்றால், அதை உரிக்க, உரிக்க, "தோல்" தான், வருமே தவிர, முன்பு கூறிய, "வெங்காயம்!" தோன்றுவதில்லை. பின் வெங்காயம் என, ஒன்றை "காணோமே" என பார்த்தால், தோல்களின் "பிணைப்பும்! இணைப்புமே" வெங்காயமாக, தோற்றியதேயன்றி, வெங்காயம் என, ஒரு பொருள், இல்லையென்றே, தெளிவாக உணரலாம்!



௩

இதைப்போன்றே, "நாமரூப ஜகத் ஜீவ" சொரூபங்களும், கண்களுக்கு, இருப்பதைப் போல், தோற்றினாலும், "இல்லை!" என, அறிவூன்றி, ஆராய்ந்தால், அனைத்தும் "மண்ணே" என்பது, உறுதியாக தெரியும்! அப்படியானால், எப்படி தோல்களின், பிணைப்பும், இணைப்பும், எப்படி, வெங்காயம் என, தோற்றியதோ, அதேபோல் இந்த மண்ணே, ஜகத் ஜீவ சொரூபங்களாக, தோற்றியது என்பது, நன்றாக விளங்கும்.

அப்படியானால், இந்த இணைப்பும் பிணைப்பும், எப்படி, எதனால் உண்டாயிற்று எனப்பார்த்தால், "மாயாமனதின்" இணைப்பும் பிணைப்பும், என உணரலாம்! இந்த மனம், எப்படி இதை தோற்றுவித்தது, எனப்பார்த்தால்? நாமரூபத்தின், "எண்ணமே" இணைப்பாகவும்! நாமரூபத்தில் புகுத்தப்பட்ட, "குணங்களே" "பிணைப்பாகும்!" என தெரிய வரும்!

மேலே கூறிய இந்த எண்ணமும், குணங்களும், இந்த மாயா, மனதின் வடிவங்களாகும்!

ஆகவே, எண்ணம் இல்லையானால், குணம் வரப்போவதில்லை! குணம் வரவில்லையானால், நாமரூப "இயக்கம்!" இல்லவே இல்லை, யென்பது தெளிவாகும்!



(4)

உ

சமுத்திரத்தில் தோன்றிய, நாமரூப
மாகிய "உப்புப் பதுமை"!
எப்படி, சமுத்திரத்திற்கு அன்னிய
மில்லையோ, அதே போல், நாமரூப
மாகத் தோன்றும், ஜகத் ஜீவ சொரூபங்
களும், அந்த பர சொரூபத்திற்கு,
அன்னியமில்லையென்பதே ஸத்தியம்!

அதாவது "நாமரூபம்!" தோற்றம். அந்த
நாமரூபத்தை, தோற்றுவித்தது, அதாவது நாமரூபத்தை
விளங்கச் செய்தது, தோற்றது. உப்புப்பதுமையை,
தோற்றுவித்த (விளங்கச் செய்த) சமுத்திரமானது,
உப்புப்பதுமைக்குள்
↑ தோற்றது. ஆகவே, "உப்புப்பதுமை" தோற்றம்.
இப்படி நாமரூபத்தை, உண்டுபண்ணியது, மாயாமனமாகும்.
நாமரூப ஜகத் ஜீவ சொரூபங்கள், தோன்றினாலும், அது
தோன்றிய, பர சொரூபம், தோற்ற முடியாது! அது "தோற்
றும்" வஸ்துவும் இல்லை! அதன் உண்மையை, எப்படி
உணர்த்துவது என்றால்? எம் திருமூலர், வாக்குப்படி,
"மரத்தில்" மறைந்தது "மாமதயானை"!
"மரத்தை" மறைத்தது " "



"பரத்தில்" மறைந்தது பார்முதலாகும்.

"பரத்தை" மறைந்தது, " "

இதன் உட்கருத்து, என்னவென்றால்?

"ஒன்று" தோற்றினால், "ஒன்று" தோற்றுது!

"ஒன்று" தோற்றி விட்டால் "ஒன்று" மறைந்தே ஆகவேண்டும். அது மாத்திரம் அல்ல. உன் கவனக் குறைவால், தோற்றிய ஒன்று, நீ என்ன முயற்சி செய்து பார்த்தாலும் திரும்ப வராது! வர முடியாது! வரக்கூடாது! அப்படி வந்தால்? பரசொரூபம், "ஸத்யம்" என்பது பொய்யாகிவிடும்.

அதாவது, "உண்மை!" தோற்றும் வரையில்தான் பொய் "மறைப்பதைப்போல்!" தோற்றுமே. தவிர, உண்மையில் பொய்யான "மறைப்பு!" இல்லவே இல்லை.

பின் மறைந்ததே என்றோ, மறைந்ததே என்றோ விசாரணை செய்து பார்த்தால், "கவனமின்மையே" காரணமாகும். இந்த கவனமின்மை, என யாம் சொல்வது மாயாமனமாகும். இந்த மாயாமனதின், "பழக்க வழக்க" தோஷ குணத்தால், விளைந்த காரியம்!

பழக்க வழக்கம் - தோஷ பேச்சும், தோஷ செய்கையுமாகும்!





அந்த காலாதீத, "பரம்பொருளானது" தான் தோன்றவும், செயல்படவும், முடியாத்தன்மையிலே, "தான் தானே" மற்றொன்று ஆக்கிக் கொண்டது! எப்போது போல், தோற்றம் உண்டாக்கிக் கொண்டதோ, அது அது தான் தன்னை, தோற்றுவித்துக் கொண்ட "யோகமாயா" ஆகும்! பின், தம்முடைய "யோகமாயாவினால்" நாம ரூப, ஜகத் ஜீவ, சொரூபங்களையும், தமக்குத்தாமே, உண்டு பண்ணிக் கொண்டு, அதை, விளையாட்டின் நிமித்தமாக, யோகமாயையின், மறு சொரூபமாக, "மாயாமனதை"! (மைந்தனை) உண்டு பண்ணி, அம் மனதினால், விளையாடிக் கொண்டிருக்கிறதென்பதற்கும், உரை வேண்டும்! அவ் "விளையாட்டின்" நிமித்தம்!

① "காலம்:" - காலம் எனச் சொல்வது, சென்ற காலம், என்றும்; நிகழ் காலம் என்றும்; வரும் காலம் என்றும்; மூன்றாக பிரித்து அதை "தோற்றத்தை" பின் வரும் காலம் என்றும்; "இருப்பை" நிகழ் காலம் என்றும்; அனுபவிப்பதையும்,



(7)

"மாறுவதையும்"! "மறைவதையும்"! சென்ற காலம் என்றும், மூன்றாக நமக்குத் தாமே வகுத்துக் கொண்டது!

இப்படி மாறுவதையும், மறைவதையும், "அழிவு" என பேசப்படுகிறது. ஆகவே அழிவு இல்லை, எப்படியென்றால்? ஓர் நாமரூபம், மற்றொரு நாமரூபமாக மாற்றப்படுகிறது! உதாரணம்:— மரமே தாணாக மாறியது! தாணே விறகாக மாறியது! விறகே கரியாக மாறியது! கரியே சாம்பலாக மாறியது! சாம்பலே அணுவாக மாறியது! அணுவே ஜீவ அணுவாக மாறியது! ஜீவ அணுவே ஆத்மாவாக மாறியது! ஆத்மாவே பரமாத்மாவாக மாறியது! பரமாத்மாவே, "பரம்பொருளாக ஆனது"! தானாகவே ஆக, அந்த காலாதீத ஒன்றாகிய பரம்பொருளே, தம்மை மேலே கூறிய, உதாரணம் போல், அனைத்து "நாமரூபமாக தோன்றி"! தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவாக, ஆக்கிக்கொண்டு, விளையாடிக் கொண்டிருக்கிறது. இங்கு விகாரம், விவகாரம் என "காலத்தை"! மையமாக வைத்து, "மனோ" நிலையில், பேசப்படுகிறது! ஆக இங்கு மனம் இல்லையானால், காலம் என, இல்லவே இல்லை! ஆகவே இங்கு "உண்மையும், உரிமையுமே"! ஓர் "போராட்டமாக" பேசப்படுகிறது. உண்மையில், அவ்வொன்றே அன்றும், இன்றும், என்றும், உள்ளது! "வேறொன்று" இல்லவே இல்லை!



(8)

ௐ "தேசம்":— தேசம் என்றால், நாடு எனப் பொருள் படும். அதாவது பல வீடுகள் சேர்ந்ததே, ஓர் கிராமம்! பல கிராமங்கள் சேர்ந்ததே, ஓர் டவுண்! பல டவுண்கள் சேர்ந்ததே, ஓர் மாநிலம்! பல மாநிலங்கள் சேர்ந்ததே, ஓர் தேசம்! பல தேசங்கள் சேர்ந்ததே, ஓர் கண்டம்! பல கண்டங்கள் சேர்ந்ததே, இப் "பூமி ஆகும்"! ஆனால் இங்கு, "தேசமே" முக்கியமாக பேசப்படுகிறது! ஆனால் இங்கு, தேசம் என்பது, வெறும் "ஜடமே" அது பேசவோ, விளக்கம் கொடுக்கவோ, போவதில்லை! அந்த கிராமத்திலும், டவுணிலும், மாநிலத்திலும், தேசத்திலும், வாசம் செய்யும் "மனம்" படைத்த, இந்த "மனிதகுணமே"! (மற்றும் நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன ஆகியவை இதில் சம்பந்தம் கொள்வதில்லை) "உடமை"யும், "உரிமை"யும்! கொண்டாடி, அதை "போராட்டமாக்கி"! அந்த மண்ணிலேயே தோன்றிய இந்த மண் சரீரங்களை வைத்து, இந்த "மாயமனமானது" விளையாடிக் கொண்டிருக்கிறது! அவை, விகார நிலையில், என் தேசம், என் நாடு என பேசிப் பேசி, விவகாரம் (பிரச்சனைகள்) செய்து, கூடிக் களித்து, வினைகளை கழித்து ஆடிக்களிப்பது, அந்த பரசொரூபமேயாகும்! ஆனால் அது மனதை வைத்து விளையாடிக் களிக்கிறது! ஆனால் இங்கு, காலதேசபேதமெல்லாம் மனதிற்கே யன்றி அதற்கு இல்லவே இல்லை! ஆகவே, அன்றும், இன்றும், என்றும் அவ்வொன்றே உள்ளது! வேறொன்றும் இல்லவே இல்லை!



3 "வர்த்தமானம்:"

வர்த்தமானம் என்றால், "வியாபாரம்" எனப் பொருள்படும். இதை "பரிவர்த்து" என்றும், சொல்லலாம். அதாவது, இதை கொடுக்கல், வாங்கல் என்றும், சொல்லலாம். இங்கு ஒன்றை, கொடுக்காமல், ஒன்றை வாங்க முடியாது. என்றும்; ஒன்றை வாங்குவதாக இருந்தால், ஒன்றை கொடுத்தே ஆக வேண்டும் என்பதே "விதி" அதுவே "நியதி"/ இதை "வினைப்" பற்று வரவு என ஸ்ரீஞானிகள் சொல்வர். இந்த வினைப் பற்று வரவை, கால்களால் நடந்து சென்றும். பிறர் நம்மைத் தேடி வந்தும். நாம் நம், "கைகளால்" கொடுத்தும், வாங்கியும் "காதுகளால்" கேட்டும். நம் "வாக்கால்" விளக்கம் கொடுத்தும், கர்மா வின் பரிவர்த்தனம் (வினைப் பற்று வரவு) ஒழுங்காக, விகிதாச்சாரப்படி, எந்த பாரபட்சமும் கோடி மில்லாமல், அதி சிறப்பாக நடைபெறுகிறது. இவைகளை, இந்த "மாயாமனமே" செய்து, கொண்டு, விளையாடிக் கொண்டிருக்கிறது/ இதனால் முன்கூறியபடி, "கால" "தேச" "வர்த்தமானங்களை" சிறப்பாக நடத்தியும், இவ்வினைத் தொடர்பு, எப்படி உண்டாகிறது என்றால்.



"நான்" என்ற நிலையில் "அஹங்கார, அபிமான, ஆதிக்க, அதிகாரத்தால்" உப்பு, உறைப்பு, புளிப்பு, என்ற நிலையில், வெகு, வெகு, வெகு, வெகு "காரசாரமாக!" வர்த்தமான வியாபாரமாதை நடைபெற்று, உலக இயக்கத்தை, செவ்வனே நடத்தி வைப்பது, இம்மாயாமயமானமாகும். ஆனால், இது "அதன்" இயக்கமாக இருந்தாலும், அது செயல்படாத்தன்மையினால், மாயா மனதின், "திறமையால்" நடத்தி, முடித்து விட்டு, நான் தானே, சும்மா, சுகமாகவே இருக்கிறது என ஸ்ரீமஹான்கள், சொல்லுவார்கள். ஆகவே, அன்றும், இன்றும், என்றும் "அவ்வொன்றே" உள்ளது. அவ்வொன்றைத் தவிர, வேறொன்றும் இல்லவே இல்லை! இதுவே சத்தியம்.

(4+5)

**4 நாமரூபம்:**— இறைவன், படைப்பு என்பது, மண், மலை, மரம், செடி, கொடி, புல், பூண்டு இவைகளே. இவை அனைத்தும், "அசையாதன" ஆகும்! மற்றும், "மனித" இனத்தையும் சேர்ந்து, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன முதலிய அனைத்து, "ஜீவர்க்கங்களையும்!" (இவைகள் அசைவன ஆகும்) உண்டுபண்ணி



உ

(11)

அனைத்துள்ளும், நாம் சர்வ வியாபியாய், "நாமே" அந்த ஒன்றே நிறைந்திருக்கிறது. மேலே கூறிய, அனைத்தையும், "ரூபமாக" தோற்றுவித்ததேயன்றி "நாமாவும்" எந்த பெயரும் அது கொடுக்கவில்லை! ஆனால், "சாட்சித் தன்மை" என்ற இறைநிலை, இந்த "மனித" இனத்தில் மட்டும், நிறைந்திருப்பதாலும், மாயா "மனம்" இந்த மனித இனத்தை மட்டும் "பற்றி" இருப்பதாலும், மேலே கூறிய, அனைத்திற்கும், அதாவது, தாவர வர்க்கங்கள், ஜீவ வர்க்கங்கள், அனைத்திற்கும், "நாமாவுக்கு" தகுந்த, "ரூபமும்" "ரூபத்திற்கு" தகுந்த "நாமாவும்" மனோமய கற்பனை வடிவில், இந்த மனித இனமே கொடுத்தது என, ஸ்ரீமகான்கள் சொல்லுவார்கள்! ஆகவே,

காரணம் அதுக்கு மனமும் இல்லை இயக்கமும் இல்லை.

"மண்மய சிருஷ்டி, மகேசன் சிருஷ்டி" என்றும், "மனோமய சிருஷ்டி, ஜீவன் சிருஷ்டி" என்றும், ஸ்ரீமகான்கள் சொன்னார்கள்! அதாவது, இறைவன், "இயற்கையின்" நிலையில், உலகை உண்டு பண்ணினான் என்றும், "செயற்கையின்" நிலையில் மனம் படைத்த, மனிதன், தோழமைக்காக, உலகை ஆக்கிக் கொண்டான் என மட்டும் உணரவும்!



(12)

மேலே கூறிய, தாவர வர்க்கங்களுக்கும்;
மற்றும் அனைத்து, ஜீவ வர்க்கங்களுக்கும்;
ஏற்றதோர் விதமாக, மாற்றி மாற்றி,
"நாமரூபங்கள்"/ கொடுக்கவும்;
அவை அனைத்தும் "மண்ணிற்கு"/
அன்னியமில்லை யென்பதே, ஸத்தியம்!
இதை ஓர் அடியார், பாடும் போது, எப்படி அமைகிறது என்றால்?
"ஊற்றை குழியிலே மண்ணை எடுத்து";
உதிரப் புனலிலே உருண்டை சேர்த்து;
வார்த்த குயவனார் பண்ணிய பாண்டம்; (இந்த உடல்)
"எசண் நீ"/ அறியார்க்கு இந்த பாண்டம்;
"எமண்ணகம்"/ என உணர்க என்றார்.

இதன் பொருள் :- உப்பாகிய, உவர் மண்ணிலும்;
குருதி (ரத்தம்) என்ற ஜலத்திலும்; (சுக்கிலம், சுரோணிதம்!)
இவைகளினால், உருவாக்கப்பட்ட, இந்த உடலானது,
வஞ்சமாயா மனதினால், இயங்கப்படுகிறது. அந்த மாயா
மனதினால், "இறைநிலையை" அறிந்து,
உணராமல்; போனால், மோகத்திலேயே அழிந்து விட்
டால், இந்த உடல், என்ற மண்ணானது, பிரயோஜனம்
அற்ற மண்ணாகவும், திரும்ப திரும்ப பிறப்
பிறப்பை!" பெற்று, அவமாகும் என, ஸ்ரீ மஹான்
களால், சொல்லப்படுகிறது! ஆகவே,



உ

(13)

நாமரூப ஜகத் ஜீவ சொரூபங்கள் அனைத்தும் "அதன்" இயக்கமாக காலாதீதமான இருந்தாலும், அது செயலிடமாகாத்தன்மையினால் "மாயாமனதின்" திறமையால் நடத்தி முடித்து விட்டு, அது "தான்தானாய்" அம்மாவே, சுகமாகவே, இருக்கிறதென, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள். ஆகவே, அன்றும், இன்றும், என்றும், அவ்வொன்றே உள்ளது. அவ்வொன்றைத் தவிர "வேறொன்றும்" இல்லவே இல்லை, இது ஸத்தியம்.

(6+7)

"6 குணம்"; "குறி": — குணம் என்றால், நாமரூப இயக்கமாகவும். குறி என்றால் அந்த நாமரூப இயக்கத்தை "சுட்டிக்காட்டப்பட்ட" குறிக்கோளாகவும், சொல்லப்படுகிறது. அதாவது, ஒவ்வொரு நாமரூபங்களும் "மனதை" இருந்தாலும், மனமெய், உபயோகத்தை அனுசரித்து, ஒவ்வொன்றிற்கும், ஒரு "தன்மையை" சுட்டிக்காட்டி, அதனதன் குறிக்கோளை அனுசரித்து தம் கற்பனை வடிவில், கோடி குணங்களை, கற்பிப்பது, இந்த மனதின் வேலையாகும். இந்த மனமெய் கற்பனையானது "ஜகவாஸ பழக்கவழக்கம்" என்ற, மது மயக்க போதையாகும், என ஸ்ரீ மஹான்கள் சொல்வார்.



இக்குணம், எப்படி கற்பிக்கப்படுகிறது என்றால்? நாமரூப மண்மயம், அனைத்தும், உறவு, சுற்றம், நட்பு, பொன், பொருள், போகமோகமென, கோடானு கோடி, நாமரூபங்களுக்கும், இது இத்தகையது! இது இன்னது செய்யும்/ இது இப்படி இருக்கும்! என, பல ஆயிரமாயிரம், குண தோஷங்களை, பிரித்து வகுத்துக் கொடுப்பதும், அவைகள் கூட்டி, மோதி, ஆர்ப்பரித்து, ஒன்றுடன் ஒன்று, மோதி, ஒன்றுள் ஒன்று, மயமாவதும், ஒன்றிலிருந்து, ஒன்று பிரிவதும், இப்படியாக, மண்மயமானவைகளை "ஸர்ப்.சித்ரங்கள்" (தூலங்கள் நாவரங்கள்)

விசித்திரமாகவும், விநோதமாகவும், விபரீதமாகவும், விகாரமாகவும், விவகாரமாகவும், விதண்டாவாதமாகவும், விரோத குரோத வீர்யமாகவும், பாவனை செய்து, செய்து, "ஜனிமரண" பீஜத்தை உண்டாக்குவது இந்த குணம் குறிகளேயே! இந்த நாமரூப ஜகத் ஜீவ, இயக்கமாக தோற்றங்கள், அனைத்தும் "அதன்" காலாந்தமான இருந்தாலும், அது செயல்படாத் தன்மையிலே, திறமையிலே, நடத்தி "மாயா மனதின்" முடித்து விட்டு அது "தான் காணாய்!" சும்மாவே, சுகமாகவே இருக்கிறதென, ஸ்ரீமஹான்கள் சொல்வர்! ஆனால், அன்றும், இன்றும், என்றும், அவ்வொன்றே உள்ளது. அவ்வொன்றைத்தவிர "வேறொன்றும்!" இல்லவே இல்லை! இது ஸத்தியம்!





8 (8+9+10)

# "மனம், வாக்கு, காயம்":

இங்கு மனம் என்பது, "எண்ணம்"!

வாக்கு என்பது, "சொல்"!

(தூலத்தின் செயல்) காயம் என்பது, "செயல்"! எனப் பொருள்படும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வார்கள்.

இந்த எண்ணம், சொல், செயல், ஆகிய இம் மூன்றுமே, "பிரவர்த்தி" எனச் சொல்லும், "கர்மா" ஆகும்!

இதைத்தான், ஸ்ரீ மஹான்கள், சொல்லும் போது:—

"மனதால்" செய்வதுவே, செய்கையும், கர்மாவும் ஆகும்!

"தூலத்தால்" செய்வது, செய்கையும், கர்மாவும், அல்ல!

எனப் பொருள்படும். ஆனால் இவ் விளக்கம், சற்று ஆச்சரியமாகவே தோற்றும். எப்படி யென்றால்? புண்ணிய பாவ, கர்மா சம்பந்தமே "தூலம்"/ ஆகும்!

அப்படி இருக்கும் போது, கர்மா தூலத்திற்கு, முக்யத்வம், கொடுக்காமல், மன எண்ணத்திற்கு, அதாவது, "மனதிற்கு" முக்யத்வம், கொடுக்க, காரணம் என்ன என, கேட்கத் தோணும்? அதாவது? எண்ணாமல், சொல் இல்லை! சொல்லாமல் செயல் இல்லை! என்பதே ஸத்தியம். ஆகவே, இந்த எண்ணம், முதலில் வருவதுவே, அவரவர் புண்ணிய பாவ, கர்மா என்னும், "பிராரப்த கர்மாவை"/ அனுசரித்தே, எண்ணம், சொல், செயல் இம் மூன்றும் தோன்றும்!



உ

(16)

மேலும் பிராரப்த கர்மாவானது, ஓர் "ஆகமான" கர்மாவாகும். அக் கர்மாவானது, கலிதோஷ மஹிமையால் "நான்" / "என்றல்" / "என்னுடையது" என்ற நிலையில், அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை, உரிமை, யென்னும், "எண்ண" அடுத்ததால், நடை பெறுவதால், அதுவே, ஆகாமிய மாக மாறி, வினைப் பெருக்கத்தையும், ஜனன மரண துக்கத்தையும், கொடுக்கிறது என, ஸ்ரீ மஹான்களின், அனுபவ வாசகம் இருக்கிறது. எண்ணமே வாக்காக வந்து, வாக்கே செயலாக மாறுவதால், "தூல" இயக்கமானது, வெறும் பொம்மலாட்டமே. அதைப் போலவே, "வாக்கே வாழ்க்கையாக" மாறுவதால், இங்கும் உன் வாக்கின்படி அதுவே செயல் என்ற, கர்மாவாக மாறுவதாலும், "தூல" இயக்க மானது வெறும் பொம்மலாட்டமே. இங்கும் ஓர் பழமொழி உண்டு:— "எய்தவன் இருக்க அம்பை (பாணத்தை) நோவுவதேன்?" என சொல்வார்கள். அதாவது, நம் "வினையின் படி" (புண்ணிய பாபகர்மாவின் தாவ நிலை கண்டு)



"விதி" என்ற காவல் தேவனால் (காலத்திற்கு, உட்பட்ட விஷயங்கள்) தானே, இயல்பாக, பாரபட்சம் தோஷம் இல்லாமல், விதி நாம் சாரம்படி, "ஓர் கட்டுக்குள்!" (ஆத்ம சக்திக்கு உட்பட்டு) அடங்கி, ஒழுங்காகவே நடைபெறுகிறது. ஆனால், சர்வ சதா அலைபாயும், இந்த "மனமானது" ஏன்? எப்படி? எதற்கு? எங்கே? என பற்பல கேள்விகளை, கேட்டு கேட்டு, சந்தேகம், சஞ்சலம், குழப்பம், என்ற நிலையில், தமக்கு தாமே, சில நியமங்களை, ஏற்படுத்திக் கொண்டு, "அல்லல்" (படுவதோடல்லாமல் படுத்துவதோடல்லாமல்) மேலும் மேலும் "வினைகளையும்" பெருக்கிக் கொள்கிறது!

இங்கும், கொடுத்ததை வாங்க வேண்டும் என்றும், வாங்கியதை கொடுக்க வேண்டும் என்றும், நாம் எதை விதைக்கிறோமோ, அதன் "பலன்" நாம் தான், உண்ண வேண்டும் என்றும், வேறொருவர், அதை உண்ண முடியாது என்றும், உண்ணக் கூடாது என்றும், ஓர் "கட்டுப்பாட்டுடன்!" இந்த உலகம் இயங்கி வருவதால், அதை எவரும் மீறமுடியாது! மீறக்கூடாது! இங்கு "காலம் கடந்தாம்!"

காலத்திற்கு, உட்பட்ட விஷயங்களில், நம் மனதைச் செலுத்தாமல், இருப்பதே "விவேகம்" ஆகும்! (அல்லல் படுவதும் மனமே! அல்லல் படுத்துவதும் இந்த மனமே)



அல்லல் படுவதும், இந்த மனமே!

அல்லல் படுத்துவதும், இந்த மனமே!!

எப்படி என்றால், இந்த மனமானது, இந்த பஞ்சீகிர்தம் பண்ணப்பட்ட, இந்த "லின்" உடல், "என்னுடையது" என்று, "தனதாக" பாவனை பண்ணிய, குற்றத்தால் தான்! குற்றத்தை, "சுமத்துவதும்"! இந்த மனமே ஆகும். அக்குற்றத்தை, தனதாக, "ஏற்பதும்"! இந்த மனமே ஆகும்.

உதாரணம் :- ஒருவனுக்கு, கடுமையான தலைவலியோ, ஒர் ரண வேதனையோ, இருக்கிறதென வைத்துக் கொள், "விழிப்பு" நிலையில், பாடாய் படுத்தும், அப்படி பார்த்தால் "தூங்கும்" நிலையில், என்ன வாயிற்று? ஒரு சில மணி நேரம், வலி இருந்ததா? மறைந்ததா? அல்லது வேறு எவரும் அவ்வலியை, எடுத்துக் கொண்டார்களா? இல்லவே இல்லை. ரணம் இருந்து வலி இல்லையே காரணம் என்ன? "ரணம் ரணமாகவே" இருந்தது!

இப்போதும் இருக்கிறது. ஆனால் தூங்கும்போது, உன் மனதின் (கண்ணின்) "பார்வை"! அந்த ரணத்தின் மீது, படவில்லை! விழிப்பு நிலையில், அந்த ரணத்தின் மீது உன் பார்வை, சர்வ சுதாமடுகிறது. அப்படி பார்வை அந்த ரணத்தின் மீது படுவதால், "எனக்கு" வந்துவிட்டதே, என்றும், "நான்" சிரமப்படுகிறேனே என்றும்.



உ

19

இந்த மனமானது, அவ்வேதனையை, "தனதாகபாவனை" செய்வதாலேயே, அவ்வேதனையை மறக்கவும் முடிவதில்லை. அவ்வேதனையை மறக்கவும் முடிவதில்லை. இதன் முடிவு, எப்படி இருக்க வேண்டும் என்றால்? "உடலையும், உடைமைகளையும்" தனதாக பாவனை, பண்ணாமல், ஸ்ரீ பகவானுடையதாக, பாவனை செய்து பாவனை செய்து, பழகிக் கொண்டால், காலக்கிரமத்தில், உன் "சாதனையை" அனுசரித்து, வந்த உபாதைகளோ, அல்லது இருக்கும் உபாதைகளோ, அவஸ்யம் குறையும். பின் குறைந்து, குறைந்து அது மறையும்! இதைத்தான், ஸ்ரீ மஹான் தான் சொல்லும் போது, முதலில் "மறந்து" போகும் என்றும், பின் "மறைந்து" போகும் என்றும், தன் அனுபவத்தில் சொல்வர். பலகாலம் தொடர்ந்த, "ஜகவாஸ தோஷ பழக்கமானது"; தொடர்ந்து பிடிக்கத்தான் செய்யும். ஆனாலும், அந்த பழக்க வழக்கத்தை விட்டு, இந்த ஸ்ரீ பகவான் என்ற பழக்க (நாமாவையும் அவன் கருணையான செய்கையையும்) வழக்கத்தை எண்ணி எண்ணி, அனுபவித்துக் கொண்டு வந்தால், உலகையும் மாற்றலாம்! உடலையும் மறக்கலாம்! நித்யமான ஆனந்தமும் பெறலாம்! உங்களால் முடியும்! முடியாதது இந்த வையத்தில் எதுவும் பாரு!



இந்த "மனோவாக்குகாயம்" என்ற இந்த மூன்றும், எண்ணம், சொல், செயல், என்ற மூன்றின் நிலையில், இயங்கிறதும், காலாதீதமான அதன் இயக்கமே! ஆனால், அது செயல்பட இயலாத் தன்மையினால், மாயாமனதை, இயக்கமாக்கி, அந்த இயக்கத்திற்கு, வாக்கை பயன் படுத்திக் கொண்டு, அதுவேது, "வாக்கையே வாழ்க்கை"யாக்கி, அந்த வாழ்க்கையையே, புண்ணிய பாப செயலான, "கர்மாவாக்கி" அக்கர்மாவையே, ஓர் காயம் என்ற தூலமாக்கி, அதை ஓர் உலக நாடக பாணியில், "கிட்டப்பூட்" காட்சிகளை, நடத்தி எதிலும் ஒட்டாமல், "தான்தானாய்" சும்மாவே சுகமாகவே, இருக்கிறதென, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்! ஆனால், அன்றும், இன்றும், என்றும், அவ்வொன்றே உள்ளது! அவ்வொன்றைத்தவிர, வேறொன்றும்! இல்லவே இல்லை! இது சத்தியம்!..

மேலே, இதுவரை கூறிவந்த "பத்தினையும்" அதாவது, காலம்! தேசம்! வர்த்தமானம்! நாமம்! ரூபம்! குணம்! குறி! மனம்! வாக்கு! காயம்! ஆகிய இந்த பத்தினையும், மனமய "கற்பனையின்" விளக்கங்களை கொடுத்து அம்மனமய கற்பனைகளை, "கெடுப்பதற்காகவே" இவ்வரிவடிவங்களை, அவன் அருளால், அவனாகவே, எழுதினேன். இது எப்படி, அமைந்திருக்கிறதென்றால்?



(21)

முன்பு, இரண்டாம் பக்கத்தில், கூறிய படி, வெங்காயம் என்ற ஓர் பொருள் எப்படி, இல்லையோ? "தோல்களின் இணைப்பும்: பிணைப்பும்!" எப்படி, வெங்காயம் என, தோற்றம் கொடுத்ததோ, அதே நிலையில், மேலே கூறிய, பந்தம், "நாமரூப குணம் குறியின்" அடக்கமாகும்!

அதில், இணைப்பு என்பது, ஒன்றுடன் ஒன்று இணைவதாகும்!

அதில் பிணைப்பு என்பது ஒன்றுடன் ஒன்று கலந்ததாகும்!

இதில், "நாமரூபம்" ஒன்றுடன் ஒன்று இணைவதாகும்!

இதில் "குணம் குறி" ஒன்றினுள் ஒன்று பிணைவதாகும்!

அதாவது நாமரூபம் என்ற, "தோல்" இணையவில்லையாகில், வெங்காயம் என்ற, ஓர் தோற்றம், உண்டாக முடியாது!

இணைந்த நாமரூப தோற்றத்திலே, வெங்காயம் என ஒன்று "தோற்ற ஸித்தியாகும்!" அதில், இணையப்பட்ட, "குணமும்" (வாஸனை என்ற தோஷ குணமும்) அதில், பிணையப்பட்ட, "குறியும்" (நாம ரூப ஜகத் ஜீவ, வர்க்கங்களின், கதை கதையான, பொய்யுரைகளும்) இன்றைய ஜகத்தில், விளையாட இயலாமல் போய்விடும்! (சுட்டிக்காட்டப்பட்ட அனைத்தும் குறி ஆகும்) இதில் அனைத்தும் எப்படி இணைந்து, பிணைந்திருந்து என்றால்? ரூபம் என்றால் "ஜடம்" ஆகும். நாமம் என்றால் "சூக்ஷ்மம்" ஆகும்! அந்த காலாதீத பரம் பொருளானது, செயல்பட இயலாத் தன்மையிலே,



உ

செயல்படுத்தும் நிமித்தம் "மாயா"வின் "ஈஸ்வராதிகளையும்!"

செயல்படும் நிமித்தம் மாயாவில் தோன்றிய "மனதையும்!" செயலாற்ற பயன்படும்,

"ஸூக்ஷம ஜட" சொரூபங்களான "நாம ரூபங்களை!" "ஈசன் நிலையில் உண்டு பண்ணியும்; ஜீவநிலையில்!"

அவைகளை, "கண்டு களித்தும்!"

"உண்டு கழித்தும்!!"

நாம் நாமே, தானாக விளையாடிக் கொண்டிருக்கிறது!

இதை மனம் வசம் "அகப்பட்ட மனிதன்" மட்டும் சஞ்சலமும், பயமும், துக்கமும் அடைகிறான்!

மனதை தம் வசம் கொண்ட "மஹான்கள்" மட்டும், ஸ்ரீ பகவானின் நம்பிய நிலையில் "பேரானந்தமும்"

நாம் அது! அதுவே நாம் என ஆன நிலையில் "பிரம்மானந்தமும்" அடைந்து, நாம் நாமாய் இருக்கின்றனர்.



உ

இந்த வெங்காய தோல் போன்று, இந்த
ஜடசொரூபமான ஜகம் எப்படி இணையும்,
பிணையும், உண்டாகிறது என கவனிக்கால்,
சொந்த பந்த பாச, "உறவு" களும்,
பொன் மற்றும் பொருள் "நாமரூப"
அநித்திய வஸ்துக்களும், எனது என்ற "உடமை" யும்
" " , என்னுடைய என்ற "உரிமை" யும்,
பாராட்டிய நிலையில், சொந்தத்தால் பந்தமும், பந்தத்
தால் பாசமும், பாசத்தால் "உறவு" என்ற நிலையில்,
"இணைதல்", அப்படி ஆசைவசப்பட்டு
இணைவதால், புண்ணிய பாப "வினையால் பிணை
தல்", இப்படி, இந்நிலையில் இவ்வாறு, ஒன்றை,
உருவகப்படுத்திக் கொண்டால், அதாவது ஓர் கர்மா
தாவத்தை, நாமே நமக்கு ஏற்படுத்திக் கொண்டால்,
இதற்கு "ஸ்ரீபகவான்" தான் பொறுப்பாவாரா?
" "ஸ்ரீமஹான்கள்" தான், பொறுப்பாவார்களா!
இல்லை! இல்லை! இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!
மனம் வசம் அகப்பட்ட "நீயே" பொறுப்பாவாய்!
மனதை உன் வசம் ஆட்படுத்து, அங்கு நீயே யாம்! யாமே நீ!
அங்கு யாமும்! அதுவும்! நீயும்! "ஒன்றே"!!!



உ



(1) கண்டு களித்தல் என்பது :- நாம ரூப தோற்றத்தில், "ரூபலாவண்யத்தில்" மதிமயங்கி, தன்னை, ஓர் அல்ப "ஜீவனை" பாவனை செய்து, "போக மோகத்தில்" மூழ்கி, களிப்பது, கண்டு களிப்பதாகும்!

(௨) உண்டு கழித்தல் என்பது :- நான், என்னுடையது, என்ற "மமதை" பாவனையில், அஹங்கார, அபிமான, ஆஸக்த, அதிகார வெறியால் உந்தப்பட்டு, "உடைமையும் உரிமையும்" பாராட்டி, தன்னையும் அறியாமல், "புண்ணிய பாபங்களை" ஓர் இன்பமாக சுவைத்து, சுவைத்து, சுவைத்து, முள் செடியையே தின்று தின்று, ஒட்டகம் வாயெல்லாம் ரணமானாலும், அதை மறக்கவும், மறுக்கவும் முடியாமல், உண்டு, உண்டு "கழிப்பதாம்" மேலும் சேர்ப்பதாம் உண்டு கழிப்பதாகும், என ஸ்ரீ மஹான்கள் கூறுவர்!





# "ஜீவன்"!

ஜீவன்:— ஆத்மாவே ஜீவன்! ஜீவனே ஆத்மா! ஆத்மா என்றால், பரசொரூபம் என்ற, அந்த காலாதீத, "ஒன்றாகிய" அகண்டப் பேரொளியின், ஓர் பொறியாகும்! அந்த அகண்டப் பேரொளியின், கதிர் இயக்கங்களின், ஓர் நிலை, ஈஸ்வராம்சங்கள் எனவும், ஓர் நிலை "மனம்" படைத்த, ஜீவவர்க்கங்களை (மனிதர்களை)யும் சொல்லலாம். ஆனால் நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும், கிருமி இடங்களையும், அதன் கதிர் இயக்கங்கள், என்றும் சொல்லலாம்! ஆனால் இந்த மனம் படைத்த, இந்த மனித இனம் ஒன்றே, "முக்தி" அடைய, தகுதி உடையவனாகிறான். மற்றும் அனைத்து ஜீவ கோடிகளும் அதன் கதிர் இயக்கமாக இருந்தாலும், மனித இனமாக பிறந்தாலே, முக்தி உண்டு என்றும், மற்றும், எந்த வடிவங்களுக்கும், முக்தி இல்லையென்றும், பிரமாணமாக, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்! இந்த மனித இனம் மட்டும், மனதின் "பிடியில்" சிக்கிய தன்மையால், இந்த மனதின், பிடியிலிருந்து விடுபட்டாலன்றி, முக்தி இல்லவே இல்லை! இந்த மனமானது இந்த ஆத்மாவை, ஓர் "திரை" போட்டு, மூடிக் கொண்டதாலே, இந்த ஆத்மாவை ஜீவன் என சொல்ல முடிகிறது. அந்த திரையென்பது "நான்"/"எனது"/"என்னுடையது"





என்ற "தற்காப்பு" சக்தி
யுடன் கூடிய, அஹங்கார அபிமானம்
என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இந்த மனம்
ஈஸ்வராதிகளின் (மாயாவின்) நிழல்
என்ற "மாயாவின்" ஓர் அம்சம் என்றும்,
ஓர் குழந்தை யென்றும் சொல்லலாம். முன்பு கூறிய நிலையில்
நான், என்றவ், என்னுடையது என்ற எண்ண
குணதோஷமே! நான், பந்த ஜீவன்
என, தன்னைத்தானே, குறைவுபடுத்திக் கொண்டது!
இங்கு நான், என்றவ், என்னுடையது, என்ற ஓர், தனித்
தன்மையை! ஏற்படுத்திக் கொண்ட தன்மை
யினால், ஓர் பட்டுப்பூச்சி போன்று, தன்னுள் தோன்றிய
நூல், தன்மீதே இறுக்கி இறுக்கி சுற்றி சுற்றி, அந்த
பந்தத்திலே மரணம் எய்துவது போன்று இம் மனம் படைத்த
மனிதனும், மேலே கூறிய, மூன்று எண்ண குண தோஷங்க
ளினாலும், தன்னைத்தானே, பிணைத்து, ஜனன மரணத்திற்கு
ஆளாகிக் கொள்கிறான். இந்த தனித்தன்மையை விடுத்து,
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!
என்ற, "பண்மை" நிலையால், ஸ்ரீபகவானையும், நம்மோடு
இணைத்துக் கொண்டால் மேலே கூறிய, மூன்று எண்ண குண
தோஷங்களிலிருந்தும், விடுபடலாம்! பந்த நிவர்த்தியும்
கிட்டும்! முக்தியும் பெற வாய்ப்பு உண்டு!
(குண தோஷங்கள், ஸ்ரீபகவான், ஒன்றே ஆக வேண்டும்.)



உ (௨௭)

தன்னை ஓர், அல்ப ஜீவன் என்று, இந்த மனம்
தான், சொல்லிக் கொள்கிறதே யன்றி
"ஆன்மா" சொல்வதும் இல்லை!
ஆன்மாவுக்கு, எந்த பந்தமும் இல்லை!

ஆன்மா, அடையத்தக்க, முக்தியும் இல்லை! இந்த
ஆன்மா, "நித்திய முக்தனே"!
பந்தம் என்றும், முக்தி என்றும், எந்த பிணைப்பும்
அற்றவனே ஆன்மாவாகும்! ஆகாயத்தை, எதுவும்
எக்காலத்தும், எந்நிலையிலும், எதுவும் எப்படியும்
எப்படி தொடமுடியாதோ, அதே போன்று இந்த ஆன்மாவை,
எதுவும், எக்காலத்தும், எந்நிலையிலும், எப்படியும்,
தொடமுடியாது, என்பதே சத்தியமாகும்! இந்த
மாயாவில், தோன்றிய, இந்த மாயா மனமே,
தம் "எண்ணத்திரையில்" (தம்முடைய
கற்பனையால்) நான், என்றால், என்னுடையது
என்ற, பாவனையால், அஹங்கார, அபிமானங்க
ளால், ஓர் எண்ணத்தின் திரையால், இந்த ஆன்
மாவை, மூடி இருப்பதால், அது ஜீவன் என்று பேசப்படு
இறது.
உண்மையில், ஜீவன் என்று ஒன்று, இல்லவே இல்லை!



உ

(௨௮)

தன்னாலே தான் கெட்டால், அண்ணாவி என் செய்வான்? என்ற பழமொழிப்படி

அதாவது, யானையானது, தன் தலையிலேயே தானே சேற்றை வாரி, இறைத்துக் கொள்வது போன்று, நான் ஓர் ஜீவன் என்றும், நான் ஓர் குடும்பியாகிய, சம்சாரி என்றும், என்னால்தான், முடியும் என்றும், முடிந்தது என்றும், நான் இல்லையானால், எதுவும் நடைபெறாது என்றும், குழந்தையோ, மனைவியோ, கணவனோ, உறவுகளோ, நட்போ, பொன், பொருள், போகங்களோ, "நாமரூப" அனைத்து வஸ்துக்களையும், என்னுடையது என்ற, அபிமான ஆதிக்க, அகங்கார, "வெறியின்" மோகத்தை, ஓர் திரையாக்கி, தன் கண்ணை, தானே கட்டிக் கொண்டு, ஸ்ரீபகவானையும், ஸ்ரீகுருநாதனையும், குறை சொல்லி, குறை சொல்லி, இந்த மனம், பழகிவிட்ட தன்மையானால், அதை நிவர்த்தி செய்ய, இந்த மனம் தான், பயிற்சி செய்ய வேண்டுமன்றி, வேறு எவரும் இந்த, ஜீவ பந்த நிவர்த்திக்கு, பொறுப்பு இல்லவே இல்லை! இதை ஸ்ரீவாசிஷ்டத்தில், ஸ்ரீவசிஷ்டர்பிரான்,



உ



ஸ்ரீராமனுக்கு சொல்லும் போது :-

வசிஷ்டர் :- ஹே ராமா! இதை உணர்.
பந்தமும் இல்லை! முக்தியும் இல்லை!!
பந்தம் மோக்ஷம் என்னும், சுழலில்
சுழல்பவர்களும், எவரும் இல்லை!

"ஒன்றே" எப்போதும், எக்காலத்தும், எவ்விடத்தும், இருக்கின்ற, வஸ்துவே இருக்கிறது! போனதை போலும். வருவதைப் போலும், லாபநஷ்டத்தைப் போலும், இன்பதுன்பத்தைப் போலும், தோன்றுவது அனைத்தும், இம் "மாயா மனதின்" கற்பனையே யன்றி வேறொன்றும் இல்லவே இல்லை! ஆகவே, போனதைப் பற்றியும், இருப்பதைப் பற்றியும், வருவதைப் பற்றியும், "விகாரமான" எண்ணம் இல்லாமல், ஒன்றும் இல்லை என்றும், அதாவது "நாமரூபம்" எதுவும் இல்லை என்றும், ஒன்று மட்டும், எக்காலத்தும் உண்டு என்றும்; அதாவது, நாமரூபங்களைக் கடந்த, சொல்ல முடியாத, சொல்லுக்கு அடங்காத, காலாதீத பரம் ஒன்றே,



உ ௨௦

உண்டென்று, திட உணர்வோடு, இருப்பாயாக! என்றார். அதைப்போல, நிலையில், பார்த்தனுக்கு, ஸ்ரீ கண்ணன் கூறும் போதும், ஆனந்தமாக சொல்லும், ஓர் வாசகமாவது!:—

கண்ணன்:— எம் பார்த்தா! நாமரூப ஜகத்தை, "சலனம்" இல்லாமல் பார்ப்பாயாக! உன் பார்வையே, "களங்கத்தை" உண்டுபண்ணுகிறதேயன்றி, வேறு காரியம், எங்கும், எப்போதும், இல்லவே இல்லை! நீ இவ்வுலகை, அசைவில்லாமல் பார்த்தால், அங்கு நீயும் அசைவில்லாமல், இருப்பதை உணர்வாய்!

உன் மனம், "சலித்தால்" இவ்வுலகமும் சலிப்படையும்! அங்கு நீயும் சலிப்படைவாய்! அதற்கு உலகின் சலிப்போ, அல்லது உன் சலிப்போ, ↑ வேறு எவரும் காரணம் இல்லவே இல்லை! அங்கு நீயே "உன்மனமே" காரணம் ஆகிறாய்! என, ஆனந்தமாக, சொன்னான் எம் கண்ணன்!



உ



மேலே கூறிய, எம் வசிஷ்டனும், எம் கண்ணனும், கூறுவதின், உட் கருத்து, என்னவெனில் :— நாமரூப ஜகத் ஜீவ, சொரூபங்கள் அனைத்துமே "மனதின் கற்பனை" விளையாட்டே யன்றி, மற்றனுவும் இல்லை யென, நிச்சயிப்பாயாக! இந்த கற்பனை விளையாட்டினாலேயே, குண தோஷ சம்பந்த எண்ணம், விருத்தியாவதால், ஜனனமரண துன்பத்திற்கு ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம், ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, இச் ஜீவ கலை, கலைவதற்கு "இறைகுரு" உணர்வும்; அளவு கடந்த, "பொறுமையும்"; எந்நிலையிலும், "போதும்" என்ற நிறைவும்; இனி ஜன்மா, இல்லவே இல்லை யென்ற "வைராக்கியமும்" இருந்தால், நான் ஜீவத்துவமும் நீங்கும்; பிறவா நிலையாகிய, "ஜீவன்முக்தியும்" அவசியம் பெறமுடியும் என, உறுதி கூறுகிறோம்!

(ஜீவத்துவம் = நான் ஜீவன் என்ற எண்ணம்)



உ

(௩௨)

உலகை, அசைவில்லாமல் பார்ப்பது:-
அனந்த நாம ரூப, ஜகத் ஜீவ, சொரூப
வடிவங்களும், "நாம் காம்"
ஏற்று வந்த, புண்ணிய பாப வினைகளை,
விகிதாச் சாரப்படி, எந்த பாரபக்ஷ தோஷம்
இல்லாமலும், எந்த குறைவு நிறைவு இல்லாமலும்,
ஒழுங்காக, நடைபெறுகிறது. இதுவே பாக்கியம்!
ஆறறிவ், மனம் படைத்த இந்த, மனித இனம் மட்டுமே,
தம் கர்மவினையினால், விகாரம் அடைந்து, விவகாரத்தை
பெருக்கிக் கொண்டு, புண்ணிய பாபங்களை பெருக்கி,
அவஸ்தைப் படுகிறான் என, உணர்ந்த நிலையில்,
எல்லாம் இறைவன் பொருளே! எல்லாம் இறைவன் செயலே!
எல்லோரும் நல்லவரே! எல்லாம் நலமே நடைபெறுகிறது!
என, உறுதியான நம்பிக்கையினால், எதையும்
"அடக்காமல்" தாம் "அடங்கி,"
நிலையில், அமைதியும், சாந்தியும், ஆனந்தமுடன்
சும்மா, சுகமாக இருப்பதுவே, உலகை அசைவில்லாமல்
பார்க்கும் நிலையாகும்!



உ

ௐ

ஸ்ரீமஹான்களின், அனுபவ வசனம்,
எப்படி இருக்கிறது என்றால்?
"மாயையை" உடையவனை, "ஈசன்" என்றும், "மனதின்" வசம் அகப்பட்டவனை, "ஜீவன்" என்றும், சொல்லுவார்கள்! அதைப் போலவே, "மனம்" இல்லாமல், "இயற்கையின்" நியதியில் உணவு தேடுதல், இனம் பெருக்குதல், தற்காத்துக் கொள்ளுதல், இடம் தேடுதல், ஆகிய இந்த நான்கை, உடைய, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, மற்றும், கிருமி கீடகங்கள், அனைத்தையும், "ஜீவவர்க்கங்கள்" என்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வர். ஆதலால் இந்த ஜீவவர்க்கங்கள் அனைத்தும், மனம் படைத்த மனிதனாக பிறந்து "மனதை" ஜயித்து, மனம் மறைந்தாலன்றியே, ஜீவன் முக்தி பெற, வாய்ப்பு உண்டு. இங்கு ஓர் கேள்வி எழலாம்? மனதால் படும் அவஸ்தை, இந்த மனித ஜன்மாவில், பெரும்பாடாக இருக்கிறதே! பின் ஏன் அந்த, மனமில்லாத, ஜீவவர்க்கங்களுக்கு, ஜீவன் முக்தி இல்லை என, கேட்கத் தோணும்?



உ



அதன் பதில்:— அனேகது, மனிதன் என்கிற ஜீவர்களும், (மனம் படைத்தவர்களும்) இந்த, "மனதினாலேயே" புண்ணிய பாபங்களைச் செய்து, அவைகளுக்கேற்ப, மேலே கூறிய, ஜீவவர்க்கங்கள், ஆனவர்களாகும்! ஆனால், இவைகளுக்கு, இன்று மனம் இல்லையென்பது, உண்மையே! ஆனால் நேற்று, (முன்மனிதஜன்மாவில்) தேடிய, புண்ணிய பாப வினைகள், "சஞ்சிதம்" என்ற, ஆதிவினையாக, அவை அழியாமல், இவர்களுக்காக, காத்துக் கொண்டிருக்கிறதென, பொருள் கொள்ளவேண்டும்! ஆகவே "மனதால்" சேர்த்த வினைகளை, "மனதால்" மட்டுமே, அழிக்க முடியுமேயன்றி, "மற்றொன்றால்" அழிக்க முடியாதென்பதே, பேருண்மையாகும்!

மற்றொன்றால் என்றால், ஈஸ்வராதிகளாலும், அழிக்க முடியாது, என்பதே உண்மையாகும்!



ஒ5

# “காரணம்?”

ஈஸ்வராதிகளுக்கு, மனம் இல்லை!
ஆனால் மாயை உண்டு! மனதால்,
சேர்ந்த வினைகள், மனதால்தான்,
அழிக்க முடியுமேயன்றி, மாயையால் அழிக்க
முடியாதென்பதே, “விதி” அதுவே “நியதி”!

இங்கு, ஓர் உண்மையெப்படி, புலனாகிறது என்றால்?
“மாயை” என்றால், ஒன்றை மற்றொன்றாக,
“மாற்றிக்காட்டும்” தன்மையது!
“மனம்” என்றால், மாயையின் மாற்றத்தால்,
உண்மை அறியமல், “ஏமாந்து” அந்த
ஏமாற்றத்தின், தடுமாற்றத்தால், “மோஹா
வேசத்தால்” (மோஹ ஆவேசத்தால்)
எண்ணங்கள் விருத்தியாகி, நான், என்னுடையது என, கர்மாவை பெருக்கிக்கொண்டே, இந்த மனதின், வேலையாகும்! இந்த மூன்று நிலைகளில், இந்த மனமானது, மயங்கி செயல் படுவதால்.



மாயாவின் "மாற்றத்தால்"

(தடுமாறி) "ஏமாந்து" சோகம்,
மோகம், பயம், துக்கம் என தன்நிலை
மறந்து, "ஏழ்ச்சி"க்கும், "வீழ்ச்சி"க்கும்,
ஆளாகி விடுவதால், ஜீவன் என்ற, பெயர் பெற்று,
புண்ணிய பாபத்திற்கு, உட்பட்டு ஜனனமரணத்தில்,
வீழ்ந்து விடுகிறான்.
ஆகவே, இது மாயாவாகிய, "இறைவன்"
குற்றம், இல்லவே இல்லை. இது மனதின், தடுமாற்ற
த்தால், ஏமாந்த குற்றமாகும்!

ஏழ்ச்சி:- நான், என்னால், என்னுடையது என்ற
நிலையில், அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமானம்,
என்ற ஓர், "வெறியினையும்" உடைமை
உரிமை, பாராட்டும், கருமையான பிடிப்பினையும்.
இம்மனதின், "கொந்தளிப்பே" (பொங்கி அழிவதே)
ஏழ்ச்சியாகும்.
வீழ்ச்சி:- வினையினால் வரும், சோதனை வேதனை
களினையும். சாதனையில் ஏற்படும், தடங்கல், கால
தாமதம், மனஅயர்வு, சோர்வு, இவைகளினையும்,





"அவநம்பிக்கை" பிறவும்! பல முறையும், முயற்சி செய்தும், திட உணர்வு கிட்டாததால், இது "நம்மால் ஆகாது" என்ற நிலையில், ஏற்படும் பயதுக்கமே வீழ்ச்சியாகும்!

இவ்வெழுச்சியும், வீழ்ச்சியும், இம்மனதின், "கொடூர" குணங்களாகும்! இவைகளே இச் ஜீவனின், "ஆணிவேர்" ஆகும்!

இந்த ஆணிவேர் அழன்று, "நாசம்" அடைய வேண்டுமானால், ஸ்ரீ பகவான் கருணையினால், அனைத்தும் நலமாகவும், சுகமாகவும், நடைபெற்று வருகிறது. என்ற ஓர்மித்த, எண்ணத்தினால், அனைத்து காட்சிகளிலும், அனைத்து நிகழ்ச்சிகளிலும், சலக்கமயும் இல்லாமல், எல்லாம் நலமே! எல்லாம் நலமே!! எல்லாம் நலமே!!! என்ற "நல்லன பாவனையால்"! யத்பாவம் தத்பவதி! என்ற நிலையில், பிரமாணமாக சொல்கிறேன். எல்லாம் நலமாகவே மாறிவிடும்/மாறியே ஆக வேண்டும்.



# "சேவை & வேலை!"

சேவை :- ஊதியம் (சம்பளம்) வாங்கலாகாது. எதிர்பார்ப்பும் கூடாது. பட்டம், பதவி, புகழ், கௌரவம் இவைகளிலும், பிறர் மெச்சவும் (பிறர் புகழவும்) கூடாது. பிறரை, வேலை வாங்கிக் கொண்டும் செய்ய கூடாது. பிறரை கண்டித்தும், தண்டித்தும் அதாவது போட்டி போட்டும், செய்யக் கூடாது. "போட்டி & பொறாமை"! இவைகளிலும், செய்யக் கூடாது. உணவோ, உடையோ, இல அவசிய பொருள்களோ அவர்களாக அன்போடு, கொடுத்தால், வாங்கலாம். ஆனால் "பணம்" மட்டும் வாங்க கூடாது. மேலே சொன்னவைகளை, நாம் கேட்கலாகாது! மேலே சொன்ன நிலைகளை, நம்மவன் ஒத்துக் கொண்டு, "பகவன்!" நாமமுடனே "குருநாதா"! என்ற ஸ்மரணையுடனே! செய்யும், காரியம் அனைத்தும்! "சேவை ஆகும்"! இங்கு வந்த கர்மா முடிவதும் வேறு எந்த கர்மாவும், தொடர்வுறாது!

வேலை :- பணம் வாங்கி செய்வதும். பலன் கருதி செய்வதும், பட்டம், பதவி, புகழ், அந்தஸ்து, கௌரவம், இவைகளுக்காக, செய்வதும். பிறரை வேலை ஏவிக் கொண்டும், கண்டிப்பு தண்டிப்பு இவைகளுடன், செய்வதும், போட்டி பொறாமை இவைகளுடன், செய்வதும். உணவு, உடை, அவசிய பொருள்களை, கேட்டு வாங்கிக் கொண்டு செய்வதும், இறை குருநாமஸ்மரணை இல்லாமல், அகங்கார, அபிமான, அதிகார ஆணவத்துடன் செய்வதும் உடைமையும், உரிமையும், பாராட்டி செய்வதும் "வேலை ஆகும்"!



ஓ உ (39)

# "பத அர்த்தம்"!!!

# "மஹா சிவராத்திரி"!!!

## 15-2-2007

## "மாசி 3 வெள்ளி"!!!!!

ஆத்மானந்த குழந்தைகளே! இது ஸ்வய ஞான
னுப நூலின், **ஐந்தாவது** "**விளக்கம்**"
ஆகும் எனவும்; இதை இத்துடன் "**நிறைவு**"
செய்கிறோம் எனவும், தெரிவித்துக் கொள்கிறோம்!
"**புத்திபூர்வமாக**" அதாவது சித்தத்தின்
நிலையில், விளக்கம் தரும்போது, "**சிவசக்தி**"
சொரூபம் என, இரண்டாக தோற்றும்! அதை,
"**அறிவுபூர்வமாக**" அதாவது, இறை
நிலையென்ற சாட்சிபாவனையில், உணரும் போது
தெய்வம் "**ஒன்றே**" என தோற்றும்!
அங்கு எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது நாமே!
என சமுத்திரத்தின், உப்புப்பதுமையென,
உணர்ந்து, நம்மை கரைத்துக் கொண்டால்;



(40)

உ

காலாதீத ஒன்றை! இருக்கிறது
என்றோ, இல்லை யென்றோ, சொல்வாரும்
இல்லை! அதை கேட்பாரும் இல்லை!
ஆகவே, விவகாரத்தில், "இல்லை"
என்று சொல்லலாம்! "ஆனால்"
"உண்டு!" வாக்கத்தில் "இல்லை"!
அங்கு உணர்ச்சியும் இல்லை! உணர்வும் இல்லை!
"அது" அதுவே! "அதுவே நாம்!"
இந்நிலை, பெற வேண்டுமென்றால், எல்லாம் நீயே! என்றோ,
என்றோ! எல்லாம் அதுவே! என்ற நிலை பெற
வேண்டுமானால், அதுவாகிய "அவன்"!
கருணை பெற வேண்டும்!
அதுவாகிய, அவன் கருணை, பெற வேண்டுமானால்,
"படிப்பு" வேண்டாம்! "கல்வி" வேண்டும்!
விதண்டாவாதமான, குதர்க்கமான, பிடிவாத
மான, "கேள்வி" வேண்டாம்! அந்த ஒன்றை
அறியும், ஏக்கமும், உருக்கமும், சிரத்தையும்
உடைய, ஆழமான கேள்வி, அவசியம் வேண்டும்!



## "நாமரூப குண"!

சம்பந்த, பற்று வேண்டாம்!

## "சர்வசங்கபரித்யாகத்தில்"!

எந்த தேவையுமற்ற, பற்று வேண்டும்!

எந்த தேவையுமற்ற பற்று:— அதுவாகிய அவன் ~~நாமரூப, ஜகத், ஜீவ சொரூபம், வேண்டாம்!~~ (ஆக) வேண்டாம்! அதுவே நாம்! நாமே அது! என்ற நிலை பெறவேண்டும்! நாம் அது என்ற, நிலை பெற்ற பின், அந்த நிலையும், தானே ஒழியும்! அதைவிட, உன் முயற்சி, தேவை இல்லை! காரணம், அங்கு, **"ஒன்றுமில்லை"!** ஆகவே, எந்த முயற்சியும் இல்லை! இந்த ஆழ்ந்தகருத்தை சொல்லிவிளக்கவோ, எழுதிக்காட்டவோ, எவராலும் முடியாது! **"சுவையை சுவைப்பவரே"** உணர்வர்! ஞானியோர், காட்சியிலும், ஓசையிலும் ரமிப்பர்! காட்சியே வீழ்ச்சி! அந்த ஒன்றே சர்வசாட்சி!



உ

(அ+உ)

(1) படியெல்லாம், கடந்த சுத்த,
"பிரம்ம" சொரூபமாக, இருந்த
போதிலும்; "பஜனையால்"!
நாம உருக்கத்திலும், கண்ணீர் பெருக்
கத்திலும், "ஏங்கும்" பக்குவ ஆன்மாக்க
ளுக்காக, அவரவர் மனம், அறிவான திறம் அறிந்து
ஓர் "நாமரூபம்"! தாங்கி, கருணையே
வடிவாக, அவஸ்யம் வரும்! போதும் இந்த, நாம
ரூப ஜகத் வாழ்க்கை, இனி, ஜன்மா வேண்டாம் என்று,
ஏங்கும், பக்குவ ஆன்மாக்களுக்காக, "அதுவே"
ஓர் ஸத்குருவாக வரலாம்! அல்லது ஓர் ஸத்குருவை,
காட்டலாம்! இதுவே, பிரமாண உண்மையாகும்!

(2) "அறிவே" ஆன்மா! "ஆன்மாவே"
அறிவு! அவ்வறிவாகிய ஆன்மாவே, அசைவற்று
செயலற்று, இருக்கும் போது, "ஸத்" ஆகும்!
அதுவே, அசைந்து, செயல்படும்போது "ஸித்" ஆகும்
அதுவே அப்படி, அசைந்து செயல்படும் போது,





"ஆனந்தம்" என ஆகும்!

(3) அந்த அறிவு உருவான, ஆன்மா வானது, "மைமய்" கற்பனை பண்ணும் போது, ஜகத் ஜீவர்களாக, "மனதிற்கு" தோன்றும்! அங்கு இந்த, மனமானது, ஜகத் ஜீவ ஸ்வரூபங்கள், நம் ஆன்மாவுக்கு, அன்னியமில்லை யென்று, உணர்வதே "ஆன்ம, ஜீவ, பர" ஐக்கியமாகும்!

(4) சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், என சொல்லப்படும், "நாமரூபம்" அனைத்தும்; அவைகளை, செயல்படுத்தும் கர்த்தாக்களாகிய பிரம்மா! விஷ்ணு! சிவன்! ஆகிய மூவரும்; அந்த ஒன்றுக்கு, அன்னியமில்லை யென்றும், அங்கு "நாமும்" அந்த ஒன்றுக்கு, அன்னியமில்லை என்று உணர்வதே, ஜீவன் முக்தி ஆகும்!

(5) அந்த காலாதீத ஒன்றுக்கு, அந்தமும் இல்லை! ஆதியும் இல்லை! சொந்தமும் இல்லை! பந்தமும் இல்லை! தோற்றமும் இல்லை! இருப்பின் காலமும் இல்லை! பந்த பிணைப்பும் இல்லை! விருப்பின் மோகமும் இல்லை!



"அது அது"வாகவே இருக்கிறது!
"நாமும் அது"வாகவே இருக்கிறோம்!
என்பதே ஸத்தியம்! அதுவே ஜீவன் முக்தி!

6) "பலன்" கருதாமல், செய்வதுவே தர்மமாகும்! அதுவே காலக்கிரமத்தில், ஜீவன் முக்தியை, கொடுக்கும்!

7) மனக்கண்களுக்கு, எதிர் "எதிராய்"! தோற்றுவதே த்வைதம்! அத் தோற்றமானது "ஸ்வ" சொரூபமே, "சித்தமாக"! வடிவெடுப்பதால், தோற்றியது. சித்தத்தை, ஸித்தாக (ஆத்மாவாக) உணர்ந்து விட்டால், மனக்கண்கள் மறைந்து, "அறிவுக்" கண் பிரகாசிக்கும்! அங்கு த்வைதம் தானே ஒழியும்! அதுவே ஜீவன் முக்தி ஆகும்!

8) மனம், புத்தி, சித்தத்திலை, தோற்றும் "நாமரூப"! த்வைத தோற்றம், எந்த விநாடி, மறைகிறதோ, அங்கு சலிப்பில்லாமல், நாம் அதுவாக இருப்போம்! அதுவே ஜீவன் முக்தி!

9) மனதின் "கற்பனை" எண்ணங்களே! ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளும், அதன் பயதுக்கமும் ஆகும்!



(10) (45)

மனதின், "கற்பனை" எண்ணங்கள்
அழிந்தால், அதுவே நிஷ்டை, ஞானம்,
மோட்சம் என மாறி, "நாம்" ஆத்மா
ஆகிவிடுவோம்! அதுவே ஜீவன் முக்தி!

(11) காணும், நாமரூப, கற்பனை சொரூபம் மறைந்து,
காணும் நாமரூபம் அனைத்தும், "நாமே" என
ஆகிவிட்டால், அதுவே ஜீவன் முக்தி!

(12) அனுப்பிரமாணமாவது, "நமக்கு" அன்னிய
மில்லாமல், "நாமாக" இருந்த போதும்; நமக்கு
அன்னியமாய், நாமரூபம், தோற்றி பயத்தைக்
கொடுப்பதன் காரணம், "ஸ்ரீபகவத்"
கிருபை, பெருமையே யாகும்!
அதாவது, மாயாவில் தோன்றிய மனதை, அந்த
மாயாவிடமே, (ஸ்ரீ பகவானிடமே) சர்வார்ப்பணமாக,
விடாததே காரணம் ஆகும்! மனதை மாயாவிடம்,
விட்டுவிட்டால், அங்கு மனம் மறைந்தான தன்மை
யினால், அதுவே ஜீவன் முக்தி!

(13) ஸித் சொரூபமே, சித்தமாய் வடிவெடுப்பதால் தான்,
நாமரூப, ஜீவ ஜகத், சொரூபங்கள், தோற்றுகின்றன!
சித்தம் இல்லை. யெல்லாம் ஸித்தே என, உறுதி செய்தால்,
நாமரூப ஜகத், ஜீவ சொரூபம் மறையும்; அதுவே ஜீவன் முக்தி!



(14) "நாமரூப" ஜகத்தையும், நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, அனைத்தையும், ஸ்ரீபகவானாக "பார்ப்பதும்", ஸ்ரீபகவான் செயலாக, "உணர்வதும்", தன்னுள்ளும், தன் இயக்கமும், ஸ்ரீ பகவானுடையது என, உணரும் நிலையே ஸ்ரீபகவானை, நேருக்கு நேர் "காணும்" (உணரும்) நிலையாகும். எல்லாம் ஸ்ரீபகவான் செயல், எல்லாம், ஸ்ரீபகவான் பொருள், எனவும் ஆகிவிட்டால், நமக்கு இருப்பு என்றும், நமக்கு இயக்கம் என்றும், கூறும், "அஹந்தை" (அஹந்தை ஆகும்) இல்லாத தன்மையால், ஸ்ரீபகவானை, பிரத்யக்ஷமாக, காணலாம். இது இவ்வேஷ, வைத்தியத்தின், அனுபவமாகும்.

(15) மித்தை என்றும், பொருளும் இல்லை. பொய் என்றும், ஜகத்தும், ஜீவனும் இல்லை. மூட "மோஹங்கள்" என்றும், ஜனங்களும் இல்லை. மேலே கூறியுள்ள, "நாமரூபங்கள்" அனைத்தும், அந்த ஒன்றே என்றும். அதுவே நாம் என்றும், உணர்வதே, ஜீவன் முக்தியாகும்.



உ

(47)

(16) நமக்கு அன்னியமாய், காணும் அனைத்தும்,
"பிரம்ம சொரூபமாகும்"
ஆனால் இங்கு, சொல்லும் யாம்! அதைக்
கேட்கும் நீ! நம் இருவருக்கும்,
இடையில் தோற்றும், "உலகம்!"
ஆகிய, இப்பிரிவினை யெல்லாம், உன் மனதின்,
"பேதமாகிய" எண்ணமே, அவ்வாறு
தோற்றுகிறது! எல்லாம் அதுவே! அதுவே நாம்!
என ஓர்மையாவதே, ஜீவன் முக்தியாகும்!

(17) "நாமரூபம்" அனைத்தும்,
பிரம்மமே என, எந்த "விஷயமும்"
பாவனை செய்து, மாயாமனதை வென்று, சும்மா
சுகமாக, இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!

(18) வாய் ஞானம் இல்லாமல், "வாக்கை"
குறைத்தால், "அனுபவ" ஞானம் பெருகும்!
குறைவு, நிறைவு இல்லாமல் "போதம்"
என்ற, திருப்தி கொண்டால், மனம் மறைந்தாகும்.
மனம் மறைந்தாகும் நிலையே, ஜீவன் முக்தி!



(19) உ (48)

ஊசிநாட்ட, இடம் இல்லாமல்,
அந்த ஒன்றே, நிறைந்திருக்கிறது
என்ற, "நிறைவை"
பெற்று, தாங்காமல், தாங்கும் நிலை
பெறுவதுவே, "ஸார்துயல்"!
ஆகும். அதுவே ஜீவன் முக்தியாகும்!

(20) எந்த ஹிறைடியும், "நீடமான"
"மனதில்" அனைத்து, நாமரூப ஜகம்,
எல்லாம். பிரம்மமே! அப்பிரம்மம் நாமே என்று,
"அகண்ட" பரபாவனை செய்தால்,
மாயாமனம் மறந்தாகும். அதுவே ஜீவன்முக்தியாகும்!

(21) நாமரூப ஜகத்தை, இந்த மாயாமனமே,
"எண்ணம், சொல், செயல்" கால்
காரசாரமாக, விளையாடிக் கொண்டிருக்கிறதென,
மெய் அறிவால், உணர்ந்து, மனதில் ஆழ்ந்து
போகாமல், எல்லாம், ஸித் சொரூபமாகிய,
ஆன்மாவே! அதுவே நாம்! நாமே அதுஎன
அசைவற்றிருப்பதுவவே, ஜீவன் முக்தியாகும்!



உ

௪௯

(௨௨) கனவில், இந்த மன எண்ணத் திரையில், நம்மை, நாமருபம் தேடி வருகிறது. நனவில், இந்த மன எண்ணத் திரையில், நாமே, நாமருபங்களை "தேடிச்" செல்கிறோம். ஆக இவ்விரண்டும், மனதின் விளையாட்டே என்றுணர்ந்து, நாம் அதுவே என, சும்மா சுகமாக, இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்.

(௨௩) மனம் "மறைத்தாலும்" பரியங்கம், மனோ வியாபாரமாகிய, அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை, உரிமை, ஆகிய வைகளை விலக்கித், நாம் அடங்கி இருந்துகொண்டு பிறரை அடக்காமல் இருந்தால், அதுவே ஜீவன் முக்தி!

(௨௪) சந்சலமனம் நாமல்ல! ஸ்வயம் ஜோதி யான பரப்பிரம்மமே, "நாம்" எனுமிட உணர்வினால், உணர்ந்து, கலக்கம், கனக்கம், பயதுக்கம், இவைகளை நீக்கி, நாமருபே ஜகத்தில் கண் இருந்தும் குருடாய், காது இருந்தும் செவிடாய், வாய் இருந்தும் ஊமையாய், சும்மாவே, சுகமாக இருப்பதுவே ஜீவன் முக்தியாகும்.



௨௫ மனம் அசைந்தால், அதாவது, கற்பனை விரிந்தால், ஜகத் ஜீவ நாமரூபங்கள், விகாரம் அடையும்! மனம் அசையாமல், விகாரம் அடையாமல், இருந்தால் அதாவது, கற்பனை பண்ணாமலிருந்தால், காலாதீத பரமாகவே தோன்றும் அதுவே ஜீவன் முக்தியாகும்!

௨௬ மனம், "கற்பனையை" ஒழித்தால், மனம் மறைந்தாகும்! அதுவே, சுதந்திரமும், சுகமாகும்! வெகு வெகு வெகு, சுலபமாகும்! அதுவே, ஜனனமரணமில்லாத ஜீவன் முக்தியாகும்!

௨௭ கனவிலும், நனவிலும் "நாமரூபம்" அனைத்தும், நமக்கு அன்னியமாய் இல்லை! அந்த நாமரூபம் பொய்யாகும்! அதனுள் இருக்கும், சைதன்யமே மெய்யாகும்! அதுவே நாம்! நாமே அது என அசைவற்றிருப்பதே ஜீவன் முக்தியாகும்!

௨௮ கஷ்டம் கவலை, பயம் துக்கம், சலனம் சஞ்சலம் இல்லவே இல்லை! இவை ஜக வாச தோஷ பழக்க வழக்கத்தால், வந்ததாகும்! எல்லாம் ஒன்றே! எல்லாம் நலமே! எல்லாம் அது வாகிய அவனே! என எண்ணி மனம் சாந்தியானால் "அது" வாகிய "அவன்" கருணையினால், நலமே முடிவும் அதுவே ஜீவன் முக்தியாகும்!



(29) (51)

இவைகள் கல்வியால் பிறவர்த்தையாகும்.
பேர், புகழ், பட்டம், பதவி, பணம், இவற்றின்
படிப்பு வேண்டாம்! சர்வாத்மனாநிலையில்,
எல்லாம் ஒன்றே! எல்லாம் நானே!
அது நானே என்ற, கல்வி வேண்டும்!
கல்வியே
மரணபயம், துக்கம், அனைத்தையும், போக்கும்!
அதுவே ஜீவன்முக்தியாகும்!

(30) கறையற்ற! மறைவற்ற! குறைவற்ற!
பிரம்மம் ஒன்றே, சத்தியம்! காண்பதோ!
கேட்பதோ! அதுபற்றி பேசுவதோ! நினைப்பதோ!
சுத்தப்பொய்யே.
அது ஒரு காலமும், இல்லவே இல்லை! அந்த பரமே,
நாம் என, அசைவற்றிருப்பதே, ஜீவன்முக்தியாகும்.

(31) நாமரூப, ஜகமாகவோ, சரீரங்களாகவோ,
அவைகளின், இயக்கங்களாகவோ, இன்ப துன்ப,
புண்ணிய பாபங்களாகவோ, கற்பனை
செய்யாதே! இவை அனைத்தும், மனதின் விளையாட்டு.
அவை நானும் அல்ல, நம்முடையதும் அல்ல. நாம்
பிரம்ம சொரூபமே என, அசைவற்றிருப்பதே ஜீவன்
முக்தியாகும்!

(32) மனம் சலனமும், அதனால் சலிப்பும், அடைவ
தனாலேயே, நாமரூப ஜகத், ஜீவ சொரூபங்கள்,
தோன்றுகிறது. இங்கு மனம், சலிக்காமல், இருக்க
வேண்டுமானால்,



"அகம் ப்ரம்மம்! ஜகம் ப்ரம்மம்! அகமே எல்லாம்!" என்று, பிரம்மாண்ட பாவனையை, இடைவிடாமல், செய்தால், சலிக்கும் மனமானது, உன்பாவனையை அனுசரித்து, மெள்ள, மெள்ள, அசையாமல் நிற்கும், அதுவே ஜீவன் முக்தியாகும்!

(33) மேலே கூறியபடி, அகம் பிரம்ம பாவனையில், மனம் அசைவற்று நின்றுவிட்டால், "பேதம்! "குற்றம் குறை" "விருப்பு, வெறுப்புகள்"! தானே மறைந்துவிடும். அதுவே ஜீவன் முக்தியாகும்!

(34) ஆத்மஞானம் பெறுவதற்கு, கீழான பிறவிகளோ, பாவமான செய்கைகளோ, "தடையாக" இருக்கக்கூடாது! இருக்கவும் முடியாது! கர்மா கர்மம்! தர்மா தர்மம்! இவைகள் ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளுக்கு உண்டு. ஜீவன் முக்தர்க்கு, எந்த தடைகளும், இல்லவே இல்லை! பிரம்மாண்ட பாவனையில், மனம் நிலைத்து நின்று, சந்தேகம், சேர்க்கபயம், நீங்கிடவே, அது ஜீவன் முக்தியே!





35 மாயை, அவித்தை, அஹங்காரம், மனம், புத்தி, சித்தம், கருவி, கரணங்கள், அனைத்து ஜீவ கோடிகளும், இயக்கங்களும், "ஸித்தாகிய" (ஆத்மாவாகிய) "சித்தத்தின்" கூறுபாடுகளாகும்.

அதைப் போலவே, அது இயக்கம் இல்லாத தன்மையிலும், இயங்குவதற்காகவே "ஸ்வராதீனமாக" தானே தன்னை தோற்றுவித்துக் கொண்டது. ஆகவே அனைத்தும் ஒன்றே என்ற திட உணர்வோடு இருந்தால், அதுவே ஜீவன் முக்தி.

36 "நமக்கு" அன்னியம், எதுவும் இல்லை என்ற, திட உணர்வு, பெற்றவனே ஜீவன் முக்தன். ஆகவே, திரிலோகத்தில், ஒரு ஞானியென, ஸ்வய அனுபவ ஞானிகள் கூறுவர்.

37 அந்த ஞானிக்கு, சமாதி நிஷ்டா சாதனம். எதுவும் இல்லை. அவன் எந்த நிலையும், அதுவாகவே இருப்பான். அவனிடம் ஆவரணமயக்கமும். விசேஷ கலக்கமும் இராது.



(38) (54)

அந்த ஞானியின் நிலை, பட்டமரம்
போலும், குத்துக்கல்லைப் போலும்,
"மனமற்ற" நிலையில்,
லௌகீக, தெய்வீக நிலையில்,
"எந்த பிரவர்த்தியும்" இல்லாதிருப்பார்.

(39) பல காலமாக ஏற்பட்ட, "பழக்க" (வார்த்தையும்)
"வழக்க" (செய்கையும்) தோஷங்களால், லௌகீகத்தையும்,
தெய்வீகத்தையும் விட்டு, பரமார்த்தீகத்தில்,
மனம், நிலைத்து நிற்காது தான். ஆனால், தடையற்ற
பிரம்மான்ம பாவனையால், மனமானது, அணு அணு
வாக, கூடிக் கூடி, நிலை பெறும். இது உறுதி!

(40) அணு அணுவாக கூடி, (மனதொருமையுடன்) மனம் நிலைத்து, நின்று
விட்டால் அதுவே மனம், மாண்ட நிலையாகும்!
அதாவது, மனம் மரித்தனை நிலையாகும்! ஆகவே,
தைலதாரை போல், பிரம்மான்ம பாவனை, செய்து
வந்தால், அதுவே ஜீவன் முக்தியாகும்!
மன எண்ணங்களை, பலவாக பிரிக்காமல், எல்லாம்
ஒன்றே! அது நானே/என தமக்குள், அடங்குவதே,
மனதொருமை நிலையாகும்!



(41) உ (55)

எண்ணங்களில், குற்றம் குறை தவிர்த்தால், பேத பாவனை ஒழியும்!
இதைத் தவிர, எளிய மார்க்கம், எதுவும் இல்லை. அதுவே ஜீவன் முக்தியாகும்!

(42) வார்த்தைகள் குறை! வீண் கற்பனையை குறை!

எதை கண்டாலும், எதை கேட்டாலும், எந்த நிகழ்ச்சிகளிலும், இது நலமே! இது நலமே! என எண்ணு! நவமே காண்பாய், நவமே உணர்வாய். அதுவே ஜீவன் முக்தி!

(43)

நாமரூப சரீரங்கள், நாம் அல்ல என்றும், நாமரூப, ஜகத் சொரூபங்களும், நம்முடையதும் அல்ல! நாமும் அல்ல! என்ற நிலையில், பேத பாவனையாகிய, சாபொண்ம பாவனையை, இடைவிடாமல் செய்தால், மோஹம் ஒழியும்! அந்த மோஹம் அற்ற நிலையே, ஜீவன் முக்தியாகும்!



௪௪ உ 56

ஸ்திரீ போக பாவங்களில், அவைகளின் அங்கங்களையும், அதன் செய்கைகளையும் மனக்கற்பனை வண்ணமல்; இவை எல்லாம் "அவனுடையதே!" இவை எல்லாம், "அவன் செயலே!" என உன் மனதை, அவன் வசம் (ஸ்ரீ பகவான் வசம்) (இது இவ்வேளையின் அனுபவம்) திருப்பினால், அது மோஹமும்! காமமும்! ஆகாது! நடைபெறும், விளையாட்டும், முடிந்து "கழியும்!" அது ஜீவன் முக்தியில் முடியும்! இது உறுதி! (ஆனால் பரஸ்திரீ போகம் கூடாது)

௪௫ எல்லாம் ஸ்ரீ பகவான் பொருளே! ஸ்ரீ பகவான் செயலே! அவனன்றி, அணுவும் அசையாது என்ற, "ஓர்மித்த" எண்ணத்தை மனதில் வைத்துக் கொள். உன் அனுபவ முதிர்ச்சியினால், எல்லாம் ஒன்றே எல்லாம் நலமே! அது நாமே! என முடித்துக் கொள். அதுவே ஜீவன் முக்தியாகும்!

௪௬ உன் "மனமே கற்பனையே" மாயை! அவித்தை! பந்தம்! முக்தி! சித்தம்! ஜீவன்! உலகம்! ஈசன்! இவைகளின், நாம ரூபமாகும். இவை அனைத்தும் இல்லவே இல்லை! அந்த ஒன்றே சத்தியம்! அதுவே நாம் என, அடங்குதலே ஜீவன் முக்தி!

உ





(47) பிரம்மான்ம பாவனையை, இடை விடாமல், செய்து வந்தால், விறகு தீர்ந்தவுடன், அக்கினி, தானே அவிவது போல், கர்மா முடிந்தவுடன், வேறு கர்மாவும் இல்லை, வேறு ஜன்மாவும் இல்லை. அதுவே ஜீவன் முக்தி!

(48) பிரம்மான்ம பாவனையில் அனுபவம், முதிர்ச்சி ஆகும்போது, தர்மா கர்மங்கள், தானே நீங்கும். அங்கு பட்டமரம் போலும்! சித்திரக் கல்லைப் போலும் அசைவற்றிருப்பதே, ஜீவன் முக்தி ஆகும்!

(49) ஆச்சாரம், அனுஷ்டானம், விதிமுறை, மடி, கட்டுப்பாடு என்னும், அங்க சுத்தியானது, எல்லாம் நலமே! எல்லாம் ஒன்றே! என்ற சித்த சுத்தியில், பூர்த்தியாகும்! பின், எந்த தர்மா கர்மங்களும், நடைப்பிடிக்க முடியாமல் போகும். அதுவே ஜீவன் முக்தி!

(50) மனமே, "கற்பனை" இல்லாதிருந்தால், காணும் காட்சி இல்லை! கேட்கும் வார்த்தையில்லை! பேசும் வாக்கும், குறைந்து மறைந்துவிடும். அங்கு, நமக்கு, அன்னியமாய், எதுவும் இல்லாத தன்மையால், அதுவே ஜீவன் முக்தியாகும்!



(51) (58)

"நாமரூப" வஸ்துக்களோ! ஜீவசரீரங்களோ! எக்காலமும், எவ்விடத்திலும், தோன்றவில்லை! அப்படி இருக்கும் போது, அவை இருந்து மறைந்தது, என சொல்ல, இடமே இல்லை! ஆச்சரியமாக இருக்கிறதா? அனைத்தும், "மண்ணே" மண்ணுக்கு அன்னியமில்லை! "மாயாவிலாஸ்" ஒன்று, மற்றொன்று போல் "மாறித்" தோன்றுகிறது! இங்கு, இந்த மனதின், தடுமாற்றத்தால், வந்து, இருந்து, மாறி, மறைவதைப்போல், ஓர் மாற்றமான காட்சியே! ஆனால் உண்மையல்ல கானலில் ஜலம் போலும்! கல்லில் நாய் போலும்! (அப்பாயில்) கட்டையில் கள்வன் போலும்! கிளிஞ்சலில் வெள்ளி போலும்! கயிற்றில் சர்ப்பம் போலும்! மரத்தில் யானை போலும்! தோன்றுகிறது.

இங்கு இருப்பது "ஸத்" ஒன்றே! இங்கு மனதின், மருட்சியால், எண்ணத்தால் மனே "விகாரமான" மற்றொன்று, தோன்றுவது போல், ஓர் காட்சியே! ஆகவே வருவதிலும்! போவதிலும்! மனம் மயங்காமலிருந்தால், அதுவே ஜீவன் முக்தியாகும்!



உ

(52) (59)

மேலே சொன்ன நிலையில், எந்த பொருளாவது, இப்படித்தான் இருக்கிறது என்று சொல்வமார்க்கம் இல்லை. அதை, "அஸ்பு" என்ற விசாரித்தில், ஸத்தாகிய, ஸித் சொரூபத்திற்கு அன்னியமாய், எதுவும் இல்லையெனத் தெளிவாகும். இங்கு, வார்த்தையின், "மாயா" ஜாலத்தால், உண்டென்றும்; இல்லை என்றும்; "விகாரம்" அடைந்து, விவகரிக்கப்படுகிறது. (பிரச்சினைக் குள்ளாகிறது) (ஸத் = பரமாத்மா! ஸித் ஆத்மா! இங்கு ஸித் அசையும் போது, சித்தமாக மாறுகிற தென்று அறிய வேண்டும்) அசித்தும், ஸத்தாக உணர்ந்தால், ஜனனமரணமில்லை! ஸித்தாகிய சித்தமாக, உணர்ந்தால், ஜனனமரணம் உண்டு! இப்படி உணர்ந்து, அதுவாக இருப்பதே, ஜீவன் முக்தியாகும்!

(53) மேலே சொன்ன நிலையில் மனமே "மரட சியானை" மனமே "மருட்சியானை" (கலக்க, பயம்) "மதம்" உண்டாகும் நிலை இம்மனதிற்கு, ஏற்படுகிறது. இந்த மதுபோதை மயக்கத்தினால்; நாமரூப "அபாரா" தை, மயக்கமும்!

உ



அந்த நாம ரூப, மயக்கத்தில் தோன்றும் "விக்ஷேப" கலக்கமும்! இவைதான், உலகமும், அதன் பொருளும், உறவு, சுற்றம், நட்பு, அனைத்தும், ஸத்தியமாக தோன்றுகிறது. இதை "அந்த ஒன்றுக்கு" அன்னியமாயில் என்று கூட உணர்வால் உணர்வதே ஜீவன் முக்தியாகும்!

(54) "பதம் பதமாக:" — சொர்க்கம்! கைலாயம்! வைகுண்டம்! பிரம்மலோகம்! மணித்வீபம்! எனச் சொல்லப்படும், "பதமுக்திகள்"! இல்லவே இல்லை!

"பதார்த்தமாக:" — இக் கலியின், தோஷத்தால், உண்ணும் உணவையே, "பதார்த்தமாக" பேசப்படுகிறது! உண்மையில், பதார்த்தம் இல்லவே இல்லை. "பத அர்த்தம்" என உண்டு! அப்பத அர்த்தமாவது; மூன்றாக, ஸ்ரீமான்கள் சொல்லுவார்கள்! அவைகள், தொம்பதம்! தற்பதம்! அஸிபதம்! என



மூன்றுமே! அவை முறையாக,
த்வம் பதத்தை, ஜீவாத்மா என்றும்;
தத் பதத்தை, பரமாத்மா என்றும்;
அஸி பதத்தை, பரம்பொருள் என்றும்;
பொருள் கொள்ளவேண்டும்!
இவை மூன்றையும், இணைத்தே "தத்.த்வம்.அஸி"
என, அதை மஹாவாக்கியங்களில், ஒன்றான
உபதேச வாக்கியமாக, கொண்டார்கள். நம் ஸ்ரீ
மஹான்கள்! ஆகவே, இங்கு கூறியபடி;
மேலே சொன்ன, பதமுக்தியை கொடுக்கும்,
(பதம் பதமான)
"நாமம்" இல்லை என்றும்.
(சாப்பிட்டு, சாப்பிட்டு)
உண்டு உண்டு தோஷ குணங்களை, உண்டு பண்ணும்,
பதார்த்தங்களின், "ரூபம்" இல்லை என்றும்.
"விதவிதமாக" விளங்கப்படும்!
விளக்கப்படும், "ஸ்பொருளும்"!
இல்லவே இல்லை யென்றும். தாவாதீதமான பரமாத்மய
"ஸ்வதந்திரமான"/ சுத்தமான,



(62)

# “அவ்வொன்றே”!

எங்கும், ஊசி நாட்டு இடம் இல்லாமல், சர்வ வியாபகமாய், உள்ளதை, உணர்வதே ஜீவன் முக்தியாகும்!

(56) மேலே சொன்ன, அவ்வொன்றை, வாக்கோ வரிவடிவிலோ, **“இல்லை”** யென சொல்லவும் முடியாது! சொல்லவும் கூடாது! அதை **“உண்டு”** யென சொல்லவும் முடியாது! சொல்லவும் கூடாது! காரணம்? அதை,

**“சொல்வாரும் இல்லை”!**

“தள்ளுவாரும் இல்லை!!!”

**“கொள்வாரும் இல்லை”!!**

ஆகவே வாக்கு மௌனமாகி! அதுவே ஸ்வய அனுபவ மனோமௌனமாகி!! **“சொஸ்தா சும்மா”** இருக்கும் நிலை பெற்றால், அல்லல் எனச் சொல்லும், கஷ்டம், கவலை, சஞ்சலம், சங்கடம் பயம் துக்கம் என சொல்லும், அனைத்து பவ துக்கங்கள் நீங்கி, **“கம்”** என இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!

(தூண் போன்று அசையாமல் இருப்பது)



(56) (63)

"ஏந்தலிறையும்"

நாம், பரப்பிரம்ம சொரூபத்திற்கு, அன்னியமாயில்லையென்று, திடவுணர்வோடு, சமுத்திரத்தில் கரைந்து, கலந்த, "உப்புபதுமை" யென, ஆதி அந்தமில்லா, அகண்ட பரப்பிரம்மத்தில், கரைந்து கலந்த, "மனோவிருத்தியே அகண்டாகாரவிருத்தி"! என்று, ஸ்ரீ அனுபவ மஹான்கள் சொல்வார்கள்.

மனோவிருத்தி:— இங்கு மனோவிருத்தி யென, கூறுவது, மனம், மறைத்தான நிலையாகும். மனம் அறிவான நிலையாகும். அதுவே பிரம்மானந்த நிலையாகும்.

இது "தத்போதத்தோடு"! (யாம் அதுவாயிருக்கிறோம் என்று நிலையோடு) கூடிய நிலையாகும். இது அகண்ட பாவனையாகும்! இது சர்வசாட்சி நிலையாகும். இதுவே ஓர் "ஞானியின் இருப்பிடம்" ஆகும்.



(57) உ (64)

அனைத்து சரீரங்களையும், அதன்
இயக்கங்களையும், மனக் "கண்கள்"
கொண்டு நோக்கினால், அது
"துவைத" விருத்தி ஆகும்!

அனைத்து சரீரங்களையும், அதன் இயக்கங்களையும்,
"பேதம்" இல்லாமல், "அறிவுக்கண்"
கொண்டு நோக்கினால் அது "சாட்சி" விருத்தியாகும்!

அனைத்து சரீரங்களையும், அதன் இயக்கங்களையும்!
எந்த "அசையும்" இல்லாமல் அனைத்தும்
"நாமே" என உணர்ந்தால் (இங்கு காண்பதெல்லாம்) "அகண்ட"
விருத்தி ஆகும். துவைத விருத்தியையும்!
சாட்சி விருத்தியையும்! நீக்கி விட்டு,
அகண்ட விருத்தியாகிய, "அகண்ட
பாவனையில்" இருப்பதே ஜீவன் முக்தி.

(58) அனைத்து மந்திரங்களையும், உபதேசிப்போர்,
சாமான்ய குரு ஆகும். இருமையற்ற பரப்பிரமம்
நீயேயென்று, சந்தேக தவக்க பயம் இன்றி, உபதேசிப்பவர்,
ஸத்குரு ஆகும்.



(59) உ (65)

அனித்தையும், அந்த ஒன்றே என்று,
"பொருந்தி" செய்யும்,
சிரவணமானது, அஸம்பாவனையை,
(தேவையற்ற கர்மாக்களை) நீக்கும்!
மேலே சொன்ன, சிரவணத்தை, சிரத்தையுடன்
"பொருந்தி" செய்யும் மனனமானது,
ஸம்சயம் என்ற, சந்தேக கலக்கத்தை நீக்கும்!
மேலே சொன்ன மனனத்தை, எல்லாம் ஒன்றே!
என்ற நிலையில், "விரிந்து" செய்யும்,
நிதித்யாசனமானது, விபரீதம், விசேஷம்,
விசித்திரம் என்னும் கலக்க பயத்தை போக்கும்!
இம்மூன்றும் (சிரவணம், மனனம், நிதித்யாசனம்)
முறையாக, செயல்படும் போது, ஆத்ம ஸாக்ஷாத்காரம்,
என்னும் ஜீவன்முக்தி வசிதமாகும்.

(60) தத் த்வம், அஸி! உபதேசமாகும்! அகம்
பிரம்மாஸ்மி! அனுபவத்தியான மந்திரம் ஆகும்!
பிரக்ஞானம் பிரம்மம்! ஸ்வய அனுபவமாகும்!
அயமாத்மா பிரம்மம்! ஸத்சிஷ்யனின், ஞான
சபைக்குரிய, ஸ்வயஅனுபவ, வாக்கியமாகும்!



உ ௬௬

௭ "முக்தி" வேண்டுமாயின், பரமுக்தி வேண்டாம்! பரமுக்திக்கு முயற்சி செய்!

"பக்தி" செய்வாயாயின், ஸ்ரீபகவத் காட்சியில், நின்று விடாதே! ஸ்ரீபகவானை, உன்னுள் உணர்ந்து, அவனே நீ! நீயே அவன்! என ஆகுவாயாக.

"த்வைத" நாமரூப ஜகத்தை, அடியோடு மறந்து விட்டு, "அத்வைதத்தில்"! நிலைபெற்று, அதுவே நாம் எனஆவதே ஜீவன் முக்தி!

௨ "அதிகம் பேசாதே! விரிவான சப்த அர்த்தங்கள்" கேளாதே! ஒரு வார்த்தைக்கு "பல" கருத்துகளை, விரித்து விரித்து பார்க்காதே! இவைகளால், குழப்பமும், கலக்கமும், தான் உண்டாகும். ஆகவே ஒன்றைப் பற்றி ஏகத்திரு! என்ற நிலையில், எல்லாம் ஒன்றே! எல்லாம் நாமே நடை வேறு இறைது என்று, ஓர்மித்து, "ஆழ்ந்து மூழ்குவாயாக!" அதுவே ஜீவன் முக்தியாகும்!



(63) உ (67)

குற்றம் குறை! பேதம் நீக்கி!

உணர வேண்டியதை, உணர்ந்தபின், "அதுவே நாம்" என்று, நிலையாய், நிதித்யாசனம் செய்து, மூழ்குவாயாக! படிப்பதை குறைத்து, நிறுத்தப் பழகு! அதுவே ஜீவன் முக்தி ஆகும்!

(64) தானியம் கிடைத்ததும், உமியை அப்புறப்படுத்துவது போல், உணர வேண்டியதை, உணர்ந்தபின், நீ உணர்ந்த நூல் ஒன்றை தவிர மற்றும், அனைத்து நூல்களையும், தூர ஒதுக்கிவிடு. "குணதோஷங்கள்" அகன்று. நீயே "சாட்ஷி" எய்தியபின், நீ உணர்ந்த நூலையும், ஓரமாக வைத்து விடு. அங்கு சுய அனுபவம், ஒன்றே போதும். அதுவே ஜீவன் முக்தி!

(65) கனவிலும், நனவிலும், காணும் அனைத்தும், உனக்கு அன்னியமாய், இல்லவே இல்லை. யாமே, அனைத்துமாய் இருக்கிறோம். எமக்கு அன்னியமாய், ஏதும் இல்லை என்று, உன் ஸ்வய அனுபவ், "பரஉணர்வோடு" கூடி, மன அசைவற்றிருப்பதுவே, ஜீவன் முக்தி!



(66) உ (68)

ஸத்தே ஸித் ஆகி! ஸித்தே அசையும் சித்தமாகி! அதுவே ஜகத்ஜீவ சொரூபங்களாகி! "ஜகத்தானே" மனதை வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறதென, தெரிந்து, "நாமரூபங்கள்"! நீக்கிவிட்டு, எந்த விதையும், ஆனந்தமாக இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!

(67) துவைதம்! அத்வைதம்! லௌகீகம்! தெய்வீகம்! பாரமார்த்தீகம்! இது உண்டு! இது இல்லை! இது வேண்டும்! அது வேண்டாம்! என்ற "பேதங்கள்" அனைத்தையும், நீக்கிவிட்டு, "தத்பதமாகிய" அதுவே நாம்! நாமே அது! என, அதை உணர்ந்திருப்பதுவே ஜீவன் முக்தியாகும்!

(68) பூரண ஞானிகளுக்கு, நாமரூப உலகம் "பரமாக" தோன்றும்! அஞ்ஞானிகளுக்கு, நாமரூப உலகம், "பயதுக்கமாக"! தோன்றும்! (கயிற்றில் வந்த சர்ப்பத்தை போல) சந்தேகம், கலக்கம், பயம் நீக்கி, ஆனந்தமாக இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!



69 உ 69

சஞ்சலம் சலனமற்று, "மன அசைவற்று" இருப்பதுவே, ஜீவன் முக்தி ஆகும். இந்த நிலை, பெற்றவரே, அவர் ஜன்மாவின், பயனைப் பெற்றவராகும்! அவருக்கு துன்பமில்லை! துயரமில்லை! அவர் எந்த வினையும் "ஏகபர" வடிவாகவே இருப்பர்! அதுவே ஜீவன்முக்தி!

70 "தன்னை அறியும் அறிவை" பெறுபவர்களுக்கு, பவபந்தம், ஒரு நாளும், அழியாது! சலனம் சஞ்சலம், இவை நீங்க, அகண்டான்ம பாவனை, அவசியம் செய்ய வேண்டும்.

அகண்டான்ம பாவனை, செய்பவருக்கு, "ஆவரண மயக்கமும்! விக்ஷேப கலக்கமும்! அவசியம் நீங்கும்! அதுவே ஜீவன் முக்தியாகும்!

71 ஸத்குரு வாயிலாக, கேட்ட அனுபவபாடத்தை, சமசாதகர்கள் வாயிலாக, "ஸத்சங்கம்" செய்யலாம்! அந்த ஸத்ஸங்கமே, நிஸ்ஸங்கம்! நிஸ்ஸங்கமே, நிர்மோஹத்வம்! நிர்மோஹத்வமே, நிச்சலதத்துவம்! நிச்சலதத்துவமே, ஜீவன் முக்தி! அதுவே, பிரமாணை உண்மையாகும்! ஸத்சங்கமேவமாக, அடங்கு! அடக்காதே! அதுவே ஜீவன் முக்தியாகும்!



(72) உ (70)

வேதம்! சாஸ்திரம்! புராணம்! இதிகாசம்! ஆகமம்! வேத வேதாந்தம்! என பலபல, "கருத்துக்கள்" இல்லவே இல்லை! அனைத்தும் ஒன்றே! "ஒரே கருத்து" மட்டும் போதும்! பலபல கருத்துக்கள், அபிப்ராய பேதங்களை, உண்டுபண்ணும்! ஒரே கருத்து, உள் ஆழ்ந்து செல்லும்! அந்நிலையை பாவித்து பரசொரூபமாவராயாக!

(73) T. (77) "ஸத்" சொரூபமே "சித்தமாக" அச்சித்தமே, மாறி, செயல்படுவதால், "நாமரூப, ஜகத், ஜீவ" ஸ்வரூபங்களை, கற்பனை பண்ணி, சித்தமாகிய மாயாமனதால், அஹங்கார அதிகார அபிமானங்களால், விளையாடிக் கொண்டிருக்கிறது! அவை அனைத்தும், நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல! நாம் அதுவே! அதுவே நாம்! என, அத்வைதாரை போல், "சிந்தித்து", "சிந்தித்து"! சுத்த சிவமாவதே சாதனை! அதுவே ஜீவன் முக்தியாமே!



(78) (71) "அகம் பிரம்மம்"! "பிரம்மம் அகம்"! என்ற, பிரம்மான்ம பாவனையானது, சத்குரு கிருபையால், கிடைக்கும்! கிட்ட உறுதியானால், பிரத்யக்ஷமாகும்! தைலதாரை போல் இந்திரியத்தால் உறுதியாகும்! "அது" வாகிய "அவன்" கருணையினால், நிலை பெற்று நிற்கும்! அதுவே ஜீவன் முக்தியாகும்.

(79) மேலே கூறிய, பிரம்மான்ம பாவனையை, சற்று "சப்தமாக" சொல்வதனால், வினை சம்பந்த எண்ணம் "சொல்" செயல்! ஆகிய மூன்றும், குறைந்து குறைந்து மறைந்து, அழிந்துவிடும்! அதுவே ஜீவன் முக்தியாகும்!

(80) சாஸ்வதீக பரசொரூபமானது, மறைவில்லாதது! அழிவில்லாதது! குறைவில்லாதது! பரிபூரணமானது! இந்நிலையில் உணர்தலே ஜீவன் முக்தியாகும்.

(81) "அதுவே" ஜகத் ஜீவ ஈஸ்வர, வடிவங்களாகவும், பஞ்சபூதங்களாகவும், அந்த நாமரூபங்களாகவும், தோன்றுகிறதென உணரவும்! சமுத்திரத்தில் உப்பு உண்டு! உப்பு என்ற நாமரூபத்தில், சமுத்திரம் இல்லை யென்பது போல், அந்த ஒன்றில் மேலே கூறிய, அனைத்தும் உண்டு! ஆனால்,



(72)

உ

அனைத்து நாமரூபங்களிலும், அந்த "ஒன்று" இல்லை யென்பதே, இப்படி உணர்ந்து, ஸத்தியமாகும்! உன்னை மறைத்துக் கொள்வதே ஜீவன்முக்தி.

(82) "நாமரூபங்கள்" வேறு! அது வேறு! "நாம்" வேறு! என்றெண்ணும், பேத புத்தியாதை, எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது! என்ற "திடஉணர்வால்" நீங்குமேயன்றி, வேறு எந்த கர்ம தர்ம, உபாசனைகளினாலும் நீங்காது! இதுவே பிரமாண உண்மையாகும்!

(83) "அகம்பிரம்மம்" என்ற, பிரம்மான்ம பாவனையால், சந்தேகக்கால் வரும், தவக்கம், களங்கம், கலக்கம், "காமம்" அணு அணுவாக சிதையும்! பதிதர்மம் என்று சொல்லும், "பதிபந்தம்" நசித்து, அபரோக்ஷ ஞானம் சித்திக்கும்! அதுவே ஜீவன் முக்தியில் சேர்க்கும்!



(84) To (86): 

அயன், ஹரி, ஹரன், முதலிய நாம
ரூபங்களும், தீர்த்தம், மூர்த்தி,
ஸ்தவம், முதலிய புண்ணிய, கர்ம
தர்மங்களும், தானே "மனதை"
விட்டு அகலும்! அனைத்து மந்திரங்களும்,
அதை போதிக்கும், குருமாரும், மனதைவிட்டு
அகலும்! தியானம், மௌனம், யோகமுறைகள்,
மனதை விட்டு அகலும்! "ஆறு" வர்ணங்
களும், நாமரூப சம்பந்த, குணதோஷங்களும்,
மனதை விட்டு அகலும்! "அந்த ஒன்றே" ஸத்தியம் என்றும், மற்றும் அனைத்தும்,
"மித்தை" என்றிட உணர்வாய், நீ ஜீவன்
முக்தி, பெற முடியும்!

(87) To (89): நிரந்தரமாயும், ஸாசுவதமாயும்,
ஸத்தியமாயும், உள்ள "எம்மிடத்தில்"!
எம் மனோமய கற்பனையால், தோன்றிய இந்த, நாமரூப
ஜகமானது, நிரந்தரமுமல்ல! ஸாசுவதமுமல்ல!
ஸத்தியமுமல்ல! அது "ஒரு கனவின்"
காட்சியாகும்! இதைகவனிக்கவும். எம் ஆழ்ந்த
உறக்கத்தில், இவ்வுலகம் என்னவாயிற்று?



உ



அந்த ஆழ்ந்த உறக்கத்தில்,
கணவன் எங்கே? மனைவி எங்கே?
குழந்தைகள் எங்கே? பொன் பொருள்
எங்கே? போக போக்யங்கள் எங்கே?
உன் நண்பன் கேட்கலாம்? உன் உறக்கத்தில்,
நீ கூறியவை, அனைத்தும், நீ காண வில்லை தான்!
காண முடியாது தான்! ஆனால் நீ கூறியவை அனைத்தும்
"நான் கண்டேன்"! என்றும்,
இன்னமும், நான் காண்கிறேன்
என்பான்! அதற்கு, யாம் கேட்கிறோம்!
எம் ஆழ்ந்த உறக்கத்தில், அப்படியே யாம் தூங்கி
விட்டால்! (மரணம் அடைந்து விட்டால்!)
யாம் மேலே கூறியவைகள், "இருந்தனவா"? அவை "போயினவா"??
யாம் அனுபவிக்காமல், மற்றவன் அனுபவிப்பதில்
"எமக்கென்ன லாபம்"??
ஆகவே மேலே கூறிய, அனைத்து நாமரூபங்களும்!
எம் கனவுக் காட்சியே! யாம் ஒருவனே நிரந்தரம்!
சாஸ்வதம்! சத்தியம்! எனஅசைவற்றிருப்பதே, ஜீவன் முக்தியாகும்!

உ





(90) கட ஆகாயம், என சொல்லும், எம்தாவுக்திநுள், உள்ள ஆகாயமும்; மறை ஆகாயம், எனச் சொல்லும், வெட்ட வெளி ஆகாயமும், "ஒன்றே"! அங்கு பேதம் இல்லை! இங்கு எம் தாவமே, பேதமும் ஆகும்! உபாதையும் ஆகும்!!

இதைப் போலவே, சர்வவியாபகமாய், எங்கும் நீக்கமற, நிறைந்திருக்கும், "பரம்பொருளுக்கு"! நாமரூப ஜகமே, "பேதமும்", "உபாதையுமாகும்"! ஆகவே, மனோமய கற்பனையில், தோன்றிய நாமரூப ஜகத்தை, "இல்லை" யெனத் தள்ளிவிட்டால், "இருப்பது" ஒன்றே! அதுவே பரம்பொருள். அதுவே நாம்! நாமே அது! என சும்மா சுகமாக, இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!

(91) "சிவோஹம்"! எனச் சொல்லும், மந்திரமானது, மறைவாக்கிய நியதியில், அமைந்திருக்கிறது! எப்படி என்றால், உபதேசமறைவாக்கியமாகிய, "தத்வம், அஸி" என்பது,



"அதுவாக, நீ, இருக்கிறாய்" என உணர்த்தும் வாது போல், இம்மந்திரமும், சிவோஹம்! என்பதும், சிவம் + அஹம் = "சிவோஹம்" அதாவது, சிவம் நீயாக! இருக்கிறாய் என, பொருள் படுகிறது! ஆகவே, நாமரூப விருத்தியின், "பேதங்களை" அகற்றிவிட்டு, ஜீவ பர "ஐக்கிய"! உணர்வோடு, அந்த ஒன்றே நாம் என, ஐக்கிய உணர்வோடு இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!

(92) மனோமயகற்பிதமான, நாமரூப ஜகத்தையும், நான் ஒரு அல்ப ஜீவன் என்ற தோம்பத வாச்யத்தை! யாம் ஜீவன் அல்ல! யாம் பரமாத்மா என்ற, தற்பத பத வாச்யத்தோடு, இணைத்து "இவ்விரண்டும்" பரம்பொருளாகிய அஸிபதத்திற்கு, அன்னியமாயில்லையென, உணர்வு பூர்வமாக, உணர்ந்து கரைந்து, தவிப்பதே, அகண்டார்த்த சொரூபமான, ஜீவன் முக்தியாகும்!



உ

(93) (77)

அநேகத்து நாம ரூப, பேதங்களையும் அகற்றி நம் சாதக பாவனையான, "**நாமரூபம்**" இல்லாத, அந்த ஒன்றே நாம் என, உணர்வு பூர்வமாக உணர்ந்து, மறைமய கவக்க பயமான, "**நான் ஓர் சம்சாரி**"! என்ற பாசப்பிணைப்பை, அகற்றிவிட்டு, நாம் அந்த "**சிவமே**"! நமக்கு, அது அன்னியமாயில்லையென்று, பரசிவ அபின்ன பாவனையால், அகண்டார்த்த வடிவாக, இருப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!

(94) மனம் புத்தி சித்த ஆகல், நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல! மாயையும் நாம் அல்ல! நம்முடையதும் அல்ல! நனவு கனவு, அவஸ்தைகளும், நமக்கு அல்ல! ஈஸ்வராதிகளும் நாம் அல்ல! அவர்கள் வேலைகளும் நமக்கல்ல! மேலே கூறிய, ஜகத் ஜீவ பராவே "**நாமரூபங்களும்**" நாமும் அல்ல! நம்முடையதும் அல்ல! என திட உணர்வோடு நாம் அந்த ஒன்றே! என இருப்பதுவே ஜீவன் முக்தியாகும்!



(95) உ (78)

பரிசுத்தமான பிரம்மம் பிரம்மமே!

நாமரூப ஜகத்தில், "அப்பிரம்மம்" இரண்டறகலந்திருக்கிறது! ஆனால், "பிரபஞ்சமாகிய" ஜகம் "நாமரூபத்தோடு"! அப்பிரம்மத்தில், இல்லவே இல்லை! அதாவது, சமுத்திரத்தில் உப்பு உண்டு! "நாமரூப" உப்பில் சமுத்திரம் இல்லை, யென்பது போல் உணர்வதே, ஜீவன்முக்தியாகும்! ஆனால் இந்த பிரபஞ்சியானது எப்படி வந்தது என்றால்? ஆத்மாவாகிய ஸித்சொரூபமானது, "சித்தமாக" வடிவெடுத்து, இக்காரியம் செய்கிறது. சித்தமானது, ஸித்சொரூபமானால், இப்பிரபஞ்சம் தோன்றாது!

(96) ஆழ்ந்த உறக்கத்தில், "இருமை" இல்லை! ஆழ்ந்த உறக்கத்தில், ஆத்மாவோடு மனம், "ஐக்கியமாகி" விட்டது! ஆனால் அங்கு, மனம் இரண்டறகலக்கவில்லை! ஆனால் ஜாக்ரா அவஸ்தையிலும், சொப்பன அவஸ்தையிலும், மனம் ஆத்மாவை விட்டு விலகி, "கற்பனை" நிலையில், நாமரூபத்தை,



உ



உண்டு பண்ணி விளையாடுகிறது!
அவ்விளையாட்டானது, நான் என்றல், என்னுடையது, என்ற நிலையில்,
அஹங்கார, அதிகார, அபிமான, ஆதிக்கத்தால், உடைமையும் உரிமையும் கொண்டாடி, விளையாடுவதால், புண்ணிய பாப வினைகளை, சேகரித்துக் கொண்டு,
"ஜனன மரணத்தை" தனக்குத்தானே, தேடிக்கொள்கிறது! இதைத்தான், எம் ரிஷி முனிவன், நான்காவது வரியில் இருந்து, எட்டாவது வரிவரை; அழகாகச் சொல்கிறான்! அதாவது? (பாடல் 9ல்)

ஒருவடிவாய் உள்ள பரப்பிரம்மம் தானே; ஒன்றிய தம் சக்தியினால் "மாயா மணமிசைந்தே" சித்தம் போல் ஆகி; சர்வ ஜக ஜீவபர வடிவமாக, சஞ்சலமாம் விவகார தசையில் தோன்றும்! என தெளிவாக, கூறுவதனை, சாதனையாளர்கள்,



உ

(80)

அனைவரும், இந்த நாம ரூப, ஜக ஜீவ, "விளையாட்டுக்கள்"! அனைத்தும், இம்மாயா மனதினுடையதே என, அறிவால் உணர்ந்து, மனதை, "ஸாந்தி" செய்தால் போதுமானது. இதன் சாதனையானது, "பொறுமையே"! அங்கு ↑ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்பு, இவை தவிர்த்து, எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது நவமே! எல்லாம் நவமே! எல்லாம் நவமே! என நீ உன்னுள், அடங்கினால், நீ அது ஆவாய்! அதுவே ஜீவன் முக்தியாகும்!

(97) "அது நாமே"! என்ற, அகம் பிரம்ம பாவனை, அனுபவமானால், மாயாமோஹா வேசம், மனதின் கடின, எண்ண முடிச்சுகள்! சஞ்சிதம் ஆகாமிய வினைகள்! சகலவித சந்தேகங்களும்! அவஸ்யம் நாசமாகும்!

(98) எல்லாம் பிரம்மமே! நாமே அது என்ற, பரபாவனையை, சர்வதா படிக்காலும்; போதித்தாலும்; கேட்டாலும்; அங்கு



(81)

ஸ்ரீ பகவான், கருணை இல்லையானால்,
"இருமை" (துவைதம்)
தோற்றமே யன்றி "ஒருமை"!
(அத்வைதம்) தோற்றவே தோற்றாது!

காரணம்:— புண்ணிய பாபம் இரண்டும், மன
எண்ணமாகும்! இந்த மனம், மாயா என்ற
ஸ்ரீபகவானிடம், தோன்றியதாகும்! இங்கு இந்த
மனதை, ஸ்ரீ பகவானிடம், சர்வார்ப்பணமாக,
விட்டாலன்றி, மனம் அழியாது! அதாவது மனம்
மறைந்தாகாது! இம் மனம், இருக்கும் வரை,
மேலே கூறிய, இருமை தோற்றமே யன்றி, ஒருமை
தோற்றாது, என்பது ஸத்தியமே! ஆகவே ஸ்ரீ பகவான்,
கருணை பெற்று, மனதையும், அதன் வினையையும்,
அவன் வசம், ஒப்படைத்து விட்டு, நாம் அது!
அதுவே நாம்! என ஆவதே, ஜீவன் முக்தி யாகும்!

(99) அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! என்ற
பிரம்மானுபாவனையால், நாமரூப உலகம் இருப்
பதைப்போல் தோற்றும்; எண்ணமானது; தூங்கு
பவன் கையில், உள்ள மலரானது, எப்படி, அவன்
கையை விட்டு, எப்படி நழுவி விடுமோ, அதைப்போல்,
நாமரூப உலக எண்ணம், தானே மறைந்துவிடும்!
இந்நிலையே, ஜீவன் முக்தியாகும்!



உ

(100) (82)

ஐந்து பஞ்ச பூதங்களும்! அகில புவனங்களும்! அவைகளின் கர்த்தாக்களான, ஈஸ்வராதிகளும்! இவைகளை, முறையோடு போதிக்கின்ற "யாமும்"! இவைகளை, சிரத்தையோடு கேட்கின்ற, "நீயும்"! மற்றும் அனைத்தும் எந்த "நாமரூபத்தோடும்"! இல்லவே இல்லை! சர்வாதீத பர சொரூபமான, "அதுவாகவே" இருக்கிறோம்! என்ற, ஸ்வய அனுபவ ஞானம், சாக்ஷியமானால்; மரத்தில் பழுத்த பழமானது, எப்படி அம்மரத்தைவிட்டு, நழுவிவிடுமோ, அவ்வாறு இந்த நாமரூப பிரபஞ்ச எண்ணம், உன் எண்ணத்தை விட்டு, அகன்றுவிடும்! அங்கு நீ அதுவாகவே இருப்பாய்! அதுவே ஜீவன் முக்தியாகும்!

(101) ஸத் அசத் கர்மாக்களோ! பக்தியோ! பூஜையோ! உபாசனையோ! கோடானுகோடி, சன்மார்க்கங்களோ! அவை அனைத்தும் மாயாமனதின், "காரியமேயன்றி"! வேறே இல்லவே இல்லை! மனம் வந்ததோ மாயா! மாயா வந்ததோ ஸ்ரீபகவான்! ஸ்ரீபகவான் வந்ததோ பரசொரூபம்! "பரமேநாம்"! நாமேபரம்! என அடங்கி, ஒடுங்கி, கரைந்து, கலத்தலே, ஜீவன் முக்தியாகும்!



உ

(௮௩)

(102) குற்றம் குறையற்ற, "உபாதை"; இல்லாத, பரமே நாம்!

சோகம், மோஹம், பயத்தை கொடுக்கின்ற, நாமரூப ஜகத்தை கற்பனையால் உண்டாக்கிய, "மனம்" நாம் அல்ல! பரந்து விரிவான, அனைத்தும், நாமே என்றும்; எமக்கு அன்னியமாய் எதுவும் இல்லையென்றும்; பிரம்மாத்ம பாவனையால், அதுவே நாம் என நிலைத்திருப்பதே, ஜீவன் முக்தி!

(103) உண்மையின் நிலையில், வேத வேதாந்த சாஸ்திரங்களும்; உபநிஷதங்களும்; பிரம்ம ஞானம் பெற்ற ஸ்ரீமஹான்களும்; எம்முடைய, ஸ்ரீ "ஸத்குரு நாதரும்"! சர்வம் பிரம்ம மயம் என, பிரமாணமாக சொல்வதாலும், சந்தேகம், கலக்க பயம் இல்லாமல், அப்படியே, அனுபவத்தைக் கூட்டி அது நாமென அறிவாயாக! அதுவே ஜீவன் முக்தி!

(104) நாமரூபம், அனைத்தையும், "பிரம்மமாக" உணர்வாயாக; நாமும் அப்பிரம்மத்திற்கு அன்னியமில்லை என, உணர்வாயாக. உன் "நலனுக்காக" சொல்லிய, இந்த பிரம்ம "பத அர்த்தங்களில்"! (பரமபத அர்த்தமல்லவா)



(84)

அணுவும், கலக்க பயம் இல்லாமல்,
சந்தேகம் கொள்ளாமல், முழுமையாக,
"நம்புவாயாக"!
நாம ரூப, குணம் குறி, கடந்த எம்,
"ஸத் குரு" மேல், ஆணையிட்டு சொல்கிறோம்!
உன் சிரத்தையின், உறுதியே ஜீவன் முக்தியாகும்!

(105) "தன் மேல்"! கவனம் வைப்பாயாக!
பிறர் மேல், கவனம் செலுத்தாமல், இருப்பாயாக!
அதாவது, உன்னுள், அடங்கி ஒடுங்கி, உள் ஆழ்ந்து,
கரைய வேண்டும்! பிறர் மேல், கவனம் செலுத்தும்
போது, உன் மனம் "நாமரூப" குணங்களால்,
சிதறடிக்கப்படுகிறது! தன்னில் தான் நிலைப்பதுவே
ஜீவன் முக்தியாகும்!
தன்னில் தான் நிலைக்காமல், "மூர்கவன்"
சக்தியில், ஈடுபடும்போது, கடல் அலைபோல், மனம்
அசைவதே! "பந்தம்" ஆகும்! பிரமாணமாகச்
சொல்கிறோம்! "உன்னை" யன்றி, உனக்கு
அயலாக "எதுவும்" இல்லவே இல்லை! தன்னில்
தானாக நிலைப்பதுவே, ஜீவன் முக்தியாகும்!



(106) (85)

உன்னில், நீ நிலைத்து, இருக்க வேண்டுமானால், உனக்கு அயலாக, தோன்றும், அனைத்து நாமரூப, "காட்சி"களும், "ஓசை"களும், திட்டமிட்ட காரியம் ஒழுங்காக நடைபெறுகிறது, என எண்ணு! அக்காரியம் "மயக்கும்" மாயாவுக்கும். ,, "மயங்கும்" மாயாமனதிற்கும். நடைபெறும், ஓர் நாடக நிகழ்ச்சியாகும் என, தெரிந்து, அவ்விரண்டும், நானும் அல்ல! நம்முடையதும் அல்ல! என வைராக்கியமுடன், கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய்! வாய் இருந்தும் ஊமையாய்! "சும்மாவே" சுகமாக இருப்பதுவே, ஜீவன்முக்தியாகும்!

(107) மேலே சொன்ன நிலையில், "மனோ அசைவற்று" இருப்பதுவே, நீ பெறும் "அகண்டானந்தம்"! ஆகும். இந்நிலை செப்படு வித்தை போல், உடனே சாத்தியமாகாது, படிப்படியாக உன் மனம்,



உ



பக்குவப்பட, பக்குவப்பட, அணு அணுவாக, "அனுபவம்"! பெறமுடியும். அதாவது உடனே வந்தால் அது உடனே போய்விடும்! அணு அணுவாக கூடினால், நிலை பெற்று நிற்கும்! இதை உன், ஸ்வய அனுபவத்தில், உணர்வது என்றால்?

1. கோர குணங்கள், படிப்படியாக குறைந்து, குறைந்து, சாந்தி அமைதி உண்டாகும்!

2. குடும்பமோ, தொழிலோ, "எக்காரி"யிலும், கடினம் தோன்றாது! இயல்பாகவே நடைபெறும்! அதாவது, "கர்மாவின்" வேகம் குறையும்.

3. உறவு, சுற்றம், நட்பு, போக்கு வரவுகள், சிரத்தை அற்றது போல் தோற்றும். "ப்ரமம்" கொடுக்காமல், குறைந்து குறைந்து தானே நின்றுவிடும்! அதனால், எந்த பாதிப்பும் "மனதை" தொடாது! தொடாது! அவ்வியக்தங்களை, "அது"வாகிய, "அவன்" பார்த்துக் கொண்டான் என்ற, பூரண நிறைவு வரும்!

4. கலிதோஷமாகிய, "பொன்" (பணம்)னும், "பெண்" (காமம்) அளவோடு கிடைக்கும் நமைப

உ





போகிறோமோ
4. அங்கு நாம் கெட்டுப் போறோமோ
என்றே, இது நம்மால் ஆகாது என்ற,
"தாழ்வான" எண்ணங்கள்,
குறைந்து, குறைந்து, மறையும்!

5. உலகமும், அதன் இயக்கமும், படக்காட்சி
போல், (T.V. காட்சிபோல்) ஸ்வாரஸ்யம் (மனம்
(ரஸனை) அங்கு இல்லாமல்) இல்லாமல், இயல்பாக நடைபெறும்!

6. குற்றம் குறை! பேதாபேதம்/ விருப்பு வெறுப்பு!
ஆகிய இவை ஒன்றும், படிப்படியாக, குறைந்து,
குறைந்து, மறைந்து விடும்!

7. எதிலும், வேகம், ஆத்திரம், அவசரம், படபடப்பு,
இவைகள், படிப்படியாக, குறைந்து, குறைந்து,
எல்லாம், ஸ்ரீ பகவான் பொருள்! அவன் செயல்
என, "பூரண நிறைவு" வந்துவிடும்!

8. அனைத்தும், பொம்மலாட்டமாகவும், ஆண்,
பெண், வித்தியாசம் இல்லாத, பதுமைகளாகவும்,
முடிவில் "மண்" ஆகவும், மாறி விடும்! மேலே
சொன்ன, இந்த எட்டு, அனுபவங்களையும், உன் அனுப
வத்தில் உணர்வாய்! இதுவே ஜீவன் முக்தியாகும்!

உ



108 88

இப்படி, நூற்றி எழு பாடல்களிலும்,
சொன்னவை, சுத்த "அத்வைதமாகவும்",
எந்த "எதிர்பார்ப்போ", எவ்வகை
"பலன்களும்", இல்லாத் தன்மையாலும்,
தெய்வமயக்கமாகிய "பதமுக்தி",
இல்லாத தன்மையாலும், "நாம்நாமாக"
நாம் என்ன ஆவோம்? நாம் எதுவாக இருப்போம்? என்று [illegible]
இருப்பதைப், நமக்கு அன்னியமாக, எதுவும்,
எவரும், இல்லாத தன்மையாலும், மனம் உடைய
ஏனைய சாதனையாளர்களுக்கு, அம்மனை மயமீது,
"மயக்கம்பிணையதை",
கிலிஎன்ற "பயம்" உண்டாவது சகஜமே.
(கிலிஎன்றால், எண்ணவடிவம்) ஆகவே இந்த,
"அத்வைதத்தை, மனதால் படைக்கப்பட்ட இந்த
"மனித" ஜீவர்கள் விரும்புவதில்லை.



ஆகவே இது, "அரிய"
"பெரிய" நூலாக இருப்பதால்,
இதை ஏற்கும், ஸந்தானமற்றவன்,
இல்லையென்றே, சொல்லலாம்! அதைப்போலவே,
இதை ஸ்வயமாகவே ஏற்று, அனுபவித்து, கரைந்து,
"பிரம்ம"
"அம்மையான" ஓர் ஸத்குருவும்,
வருவதோ, இருப்பதோ, தான் சாதனையாக்கி, அச்
சாதனையையே, போதனையாக்கும் ஸ்ரீமஹானும்,
இல்லையென்றே, சொல்லுவோம்! ஆனாலும்?????

(காரணம்? வியாபாரம்! விளம்பரம்!! ஆடம்பரம்!!! ஆகிய மூன்றுமாகும்:)

இந்த "ஸ்வயஞானமுடைய
நூல்" எவர் கைகளில் இருக்கிறதோ
அவர், "பாக்கியவானே"!!!
"ஜீவன் முக்தனே"!!!
காரணம்
பூர்வபுண்ணிய சுகிர்தம்!!!!!!
இதுபிரமாண உண்மையாகும் என, இந்த பத அர்த்தத்தை
முடிக்கிறேன்! இது அதுவாகிய, அவன்
கருணையே! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

உ

(90)



ஞானியின் உழைப்பு!

கர்மாவில் சிரத்தையற்றிருப்பான். "ஓர்ஞானி"— ஜீவன்முக்தனை, ஞானியின் காலமானது, விதேக முக்தி அடையும் பரியந்தம், "ப்ராப்தத்தின் மூலமாகவே", அல்லது "பரகருணை" மூலமாகவே. கால சஞ்சாரம் நடைபெறும். அக்காலங்களில் "ஏதேச்சையாக" அவனுக்கு உணவு! உடை! இருப்பிடம்! ஆகிய, இம்மூன்றும், இவன் தேடாமலேயே கிடைக்கும்! கிடைக்க வேண்டும்!! அது இயற்கையின் (இறைவனின்) நியதி! இது "பரம் செயல்படாத தன்மையிலே "ஸ்ரீபகவானாக" இருந்து, ஆற்றும் பரகருணையாகும்! இது விளக்கம், விதிக்கும் அப்பால் பட்டதாகும்! ப்ராரப்தம் என்றால், அவன் ஏற்று வந்த, "வினையின்" கால அளவாகும்! இங்கு, பர கருணையென்றால், அவன் கால வினை, முடிந்த பின்னும், சிவபக்குவ ஆன்மாக்களின் நிமித்தம், அவர்கள் "குருஅருளின்" நிமித்தம் "பர கருணையால்" ஸ்ரீபகவான் செயல்படுத்த, அக்காலம், சஞ்சாரம் செய்யப்படலாம்!



உ

(91)

பரம், ஸ்ரீ பகவானாக இருந்து, செயல்படும் காலங்களில், அந்த ஞானியின் ஜீவத்திற்கு, உணவு, உடை, இருப்பிட நிமித்தம், "சிரமம் இல்லாத" (கடினம் இல்லாத) "உழைப்பு"! அவசியம் தேவையென, அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்வர்! அவ்வுழைப்பும், "ஆன்மீக பணியாக"! இருக்குமேயன்றி, உலகியல் "பிரவர்த்தியின் வேலையாக" இராது! அதாவது, இந்த கலியுக ஸ்ரீமஹான்கள், செய்யும் "பொதுப்பணி" என்ற, "வேலையாக" இராது, என்பதே ஸத்தியம். ஆன்மீக பணியென்ற, "அகத் துறவாக"! இருக்கும்! இருக்க வேண்டும்! அதாவது, பிரவர்த்தியின் நிலையில், இருக்காது! இருக்கக் கூடாது! ஆழ்ந்த பக்தியோ, உணர்ந்த ஞானமோ, அனுபவ நிலையில் உணர்த்தும், "நிவர்த்தி" மார்க்கமாக இருக்கும்! இருக்க வேண்டும்! இதுவே ஓர், ஞானியின் "உழைப்பு" ஆகும்!



(92)

# "ஸ்வய அநுபவம்"!!!

ஹே கருணைக் கடலே! கிருபா சமுத்திரமே!
தயாநிதி! தயாஸாகரா! ஆனந்தஸாகரா!
பரமாத்ம சொரூபமே! சாந்த சொரூபா!
ஸத்திய சொரூபா! ஸத்குரு வார்யா!
"நாயினும்" கீடையனாய் கிடந்த, அடியவனுக்கு,
"தாயினும்" சிறந்த, தயாரூவான தத்துவனே!
"ஸத் ஸித் ஆனந்த சொரூபா"
அறிய வொண்ணா! சொல்ல வொண்ணா! விளக்க வொண்ணா!
எம் ஆனந்த சொரூபமான, "குரு நாதா"!!!

(109)

உம்முடைய, திடமான கருணையால், புன்மதி படைத்த
யாம், எம் சிறுமை நீங்கி, எந்த பின்னமும் இல்லாத!
அதாவது ஜாதி! மதம்! இனம்! மொழி! நாடு! தேசம்!
சம்ஸாரி! சந்நியாசி! பக்தன்! யோகி! ஞானி! சித்தன்!
என்னும், இன்னமும் அனேக, "சமயச்சின்னமும்"! இல்லாத, அகண்ட பரிபூரணமானோம்!
யாம், இந்த தாவம், தாங்கிவந்த, நாரண காரியத்தை,
எக்குறைவும் இல்லாமல், "பரிபூரணமாக"!
செய்து முடித்துவிட்டோம்!

(110) உம்முடைய, இந்த உபகாரத்திற்கு, "கைமாறு"
எனச் செய்யவும் சொல்லவும் ஒன்றுமே இல்லை. ஆதலால், இந்த க்ஷணம்,
"உம்பாதுகையை" நமஸ்கரிக்கிறோம்!



(93)

அதுவும், ஓர் உபசாரமே தவிர,
உண்மையில், அது பொருந்தாதுதான்!
அதாவது, அனைத்து வந்தன உபசாரங்களிலும்
"ஸ்ரீபாத" தர்ஸனம்! "ஸ்ரீபாத" சேவா!
அதி அதி அதி அதி முக்கியமாக, ஸ்ரீமஹான்
-கள் சொல்லுவார்கள்!
"பாதுகை" என்றால் பாதுகாக்கப்பட்டதை எனப்
பொருள்படும்!
பரமார்த்திக நிலையில், "இருமை"! (த்வைதம்)
இல்லாத தன்மையினில், "ஒருமையே" (அத்வைதம்)
பிரத்யக்ஷமாகவும், சாக்ஷாத்காரமாகவும்,
ஸாஸ்வதமாகவும், ஸத்தியமாகவும், இருப்பதனால்,
வணங்குபவனும், வணக்கத்தை ஏற்பவனும், இல்லவே இல்லை!
அங்கு "பேதா பேதம்" இல்லவே இல்லை!!

(111) உம்முடைய கருணையினால், யாம் அடைந்த, ஸ்வயமான
"அபேத த்ருஷ்டியினால்"! எம்மையும்
உம்மையும்; "நாமரூபமாக" காணமுடியவில்லை
அந்த ஒன்றே, "உணரமுடிகிறது"!
(சமுத்திரமும், உப்பும் போல்,)
பந்தப்பட்ட ஜீவனும் இல்லை! அதை பாதுகாக்கப்பட்ட
ஈசனும் இல்லை! அவர்களுடைய "உலகமும்" இல்லை!



112 ௯௪

எம் ஜன்மாவின், பரம எதிரியான,
"அஞ்ஞானம்" என்ற, அறியாமை
அதாவது, எம் கவனக்குறைவு! அதாவது,
மாயாமனதின், ஜகவாஸ தோஷ, பழக்க
வழக்கம் என்னும், "இருள்" அகன்றது! யாம், ஜீவன்
முக்தி, பெற்று விட்டதால், "கர்மாவில்
சிரத்தை இல்லை!" அதன் காரணம்!
"நனவிலும், கனவிலும், அனைத்து பொருள்களும்,
"எம்முள்ளேயே" இருப்பதாலும், அதை
விதிப்படி, வினைப்படி, இயக்கும் தேவதெய்வங்களும்,
"எமக்குள்ளேயே" இருப்பதாலும்,
கர்மா அனைத்தும், இயல்பாகவே, நடைபெறுகிறது. எமக்கு
எந்த, முயற்சியும் இல்லை! எந்தப் பயிற்சியும் இல்லை!!
மேலும், எம் தற்காலிக தாவரமும், அதன் இயக்கங்களும்
தேவதெய்வங்கள், தாமே கவனித்துக் கொண்டதாலும்,
"யாம் சாட்சியாய்" காண்கிறோம்!
"யாம் சர்வ சாட்சியாய்!" அதாவது
எம் அகண்டபாவனையால், ஆனந்தம் அடைகிறோம்!
ஆகவே சிரத்தை இல்லையென்போம்! சிரத்தை தேவையில்லையென்போம்!



(113) (95)

ஜகத், ஜீவ சரீரங்கள், அவைகளை இயக்கும் ஈஸ்வராதிகள், அனைத்தும் நாம ரூபங்களாகவும்; அவைகளின் குண சொரூபங்களாகவும்; தோற்றவில்லை! அவை அனைத்தும், எம் எதார்த்த, "சொரூபமாகவே" உணர்கிறோம்.

அதனால், அனாதி பவ துக்கங்கள், எதுவும் தோன்றாத, தன்மையினால், ஆணவம்! கன்மம்! மாயை! என்ற, "மும்மலமற்ற" நின்மல சொரூபமாகி, பிரம்மானந்தம் அடைந்தோம்!

(114) ஹே ஸத்குருவார்யா! ஸத்திய சொரூபா! காலம் கடந்தயாம், வாக்கிய விளக்கத்திற்காக, "காலம் கணக்கு" சொல்கிறோம்! அது ஓர், வாக்கிய விளக்கமே தவிர, உண்மையில்லை!

சென்ற "விநாடி" வரை, அஞ்ஞானம் சூழ்ந்திருந்தது.

"இச்சஷணம்" முதல், ஆத்ம ஜோதி பிரகாசிக்கிறது.

சென்ற "விநாடி" வரை, மனதால் பிடிக்கப்பட்டிருந்தோம்.

"இச்சஷணம்" முதல், மனதற்றாகவே இருக்கிறோம்.

சென்ற "விநாடி" வரை, சந்தேக புத்தியால் கெட்டோம்.



"இச்சணம்" முதல் கலக்க பயமற்றோம்!

சென்ற "விநாடி" வரை, பந்த ஜீவன் என இருந்தோம்.

"இச்சணம்" முதல், பரமாத்மாவாய் ஆனோம்.

(115) சென்ற "விநாடி" வரை, புத்தி சாலியாய் இருந்தோம்.

"இச்சணம்" முதல், அறிவாழியாய் திகழ்கின்றோம்.

சென்ற "விநாடி" வரை, பார்க்கும் பொருளாய் இருந்தோம்.

"இச்சணம்" முதல் பார்ப்பவனாய் இருக்கிறோம்.

சென்ற "விநாடி" வரை, சித்தம் என சலிப்படைந்தோம்.

"இச்சணம்" முதல், ஸித் பரம் என ஆனோம்!

சென்ற "விநாடி" வரை, சித்தத்தினால் பந்தப் பட்டோம்.

"இச்சணம்" முதல், சின்மய சொரூபமானோம்.

(116) உம்முடைய, கருணை கடாக்ஷ தீக்ஷையால் சந்தேகம்! அஞ்ஞான பவ பாசம்! ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளின், "ஆவரண" மயக்கமும்! "விக்ஷேப" கலக்கமும்! மூலத்தோடு, பஸ்பமாகி விட்டது!

(117) காலாதீத அந்த ஒன்றின், ஓர் திவ்யமான (ஞானி ஆன) ஸத்சொரூபமே, சித்தமாதவம் வைத்து,



உ

(97)

மனம் ஆக்கி, சித்தமென தோன்றி இத்
தற்பர சொரூபமான "நாமரூப"
ஜகத்தை வைத்து, விளையாடிக் கொண்டி
ருந்தது. அது அதன் விளையாட்டை,
முடித்துக் கொண்டதால், "அது, அதுவாக
வே" இருக்கிறது! அறிவு ஊன்றி, விசாரித்தால்,
"ஒன்றே. பலவானது" அதுவே,
மீண்டும், "ஒன்றானது"! விகாரமும், அதனால்
விளையும் விவகாரமும், (பிரச்சனையும்) "மனதின்
கூறுபாடும். வேறுபாடும் ஆகும் என, உணர்ந்த
தன்மையினால், சும்மாவே, சுகமாக, இருக்கிறோம்!
ஹேபிரபோ! சென்ற "பிறவி" வரை தோன்று
(118, 119)
மாத்திரமாய், தோன்றிய "தூல" உடலும்!
"சூக்ஷ்ம" உடலும்! "காரண" உடலும்!
மோஹமாக தோன்றிய, அனைத்தும்; காலம்! தேசம்!
வர்த்தமானம்! (வியாபாரம்) அனைத்தும், "நாம
ரூபத்துடனும்" எந்த விளக்கத்துடனும்
காணவே இல்லையே பிரபோ! எமக்கு அன்னியமாய், எந்த
"நாமரூப" வஸ்துக்களும், இல்லவே இல்லை! பார்க்குமிடம்
எங்கும் நீக்கமற நிறைந்த ஒன்றே, பரிபூரணமாய் நிற்கிறதே!
என்று அறிவதால், எம்மையன்றி, எதுவும் இல்லவே இல்லை!



(120) உ 

ஓம் ஐயனே! உம் உபதேசத்தால், ஆவரண மயக்கமும்! விக்ஷேப கலக்கமும்! இல்லாமல் போனதால், ஜனனம் சலிப்பு இல்லாமல், "சகஜாண்மாவாய்"! அதாவது பயிற்சி, முயற்சி இல்லாத, இயல்பான நிலையில், சாஸ்வத ஆண்மாவாய்! அகண்டானந்தப் "பேராளியாய்"! அதுவே, அனுபவ பிரம்மாண்மாவாய்! கர்த்தா இல்லாத கர்த்தத்துவம் இல்லாத, ஏகம் பரப்பிரம்மமாக இருக்கின்றோம்!

(121) எம்பெருமானே! அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! என்ற, யாமே அது! அதுவே நாம்! என்ற ஸ்வய அனுபவ ஞானத்தால், அமைதி, சாந்தி, மௌனத்தைப் பெற்று, பெருமை மிக்க "பிராமணன்" (பிரம்மத்தை உணர்ந்தவனே, பிராமணன்) என்ற நிலை பெற்று விட்டோம்!

(122) மன்மம் இல்லாத "பிரக்ஞானம் பிரம்மம்" என்ற நிலையில், உடல் உலக பிரக்ஞை இல்லாமல், ஆத்ம பிரம்மப் பிரக்ஞையோடு கூடி, அஞ்ஞானம், சந்தேகம், தொலைந்த நிலையில், அகண்டானந்த சொரூபமாகி, ஜீவன் முக்தனை திகழ்கிறேன்!



(123) உ (99)

நான், என்றல், என்னுடையது, என்ற

"ஜீவ கர்த்தத்துவம்" நீங்கி,

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், என சொல்லும்

உலக கர்த்தாக்களின், கர்த்தத்துவம் நீங்கி!

எச்சசயலும், ஏகீகரமாவும் இல்லாத, நிரதிசய

ஆனந்தம் அனுபவிக்கும், ஜீவன் முக்தன் என ஆவோம்!

(124) குறைவு நிறைவு! குற்றம் குறை! குணம் குறி!

மறைவு தெரிவு! மனோ இயக்கம், மனோ மயக்கம்! பேதா

பேதம்! விருப்பு வெறுப்பு! முதலிய அனைத்திலும்,

"நாமரூப" சொரூப! "ஜீவ" சொரூப! "ஜட

படாதி" சொரூப! என எல்லாவுருவும், ஒன்றுமின்றி

அறிய வொண்ணா! சொல்ல வொண்ணா! விளக்க வொண்ணா!

"பிரம்மமேயாமாய்! யாமேபிரம்

மமாய்"! ஸ்வயமே ஆன, "ராம்" மஹிமையை,

எப்படி சொல்வோம்? எப்படி விளக்குவோம்?

சொல்லுக்கு அடங்கான்காண்! சொல் இறந்து

நின்றவன் காண்! "வாக்கு மனமும்" கடந்த

ஸ்வயம் ஜோதி சொரூபம் காண்! என்றநிலையில் உள்ள

எங்ஙனம

↑ எப்படி சொல்வது? எப்படி வரிவடிவில் விளக்குவது??



(125) உ (100)

ஹே ஆனந்த ஸாகரா! பிரம்மானந்த சமுத்திரமே! கிருபா சமுத்திரமே! கருணா ஸாகரா! ஸத்திய சொரூபா! ஸத்குருவாரியா! ஸச்சிதானந்த சொரூபா!

## ஹே குருதேவா! ஹே குருநாதா!

உம்முடைய கிருபா கடாக்ஷத்தால், இதுவரை யாம் பெற்ற ஆனந்த அனுபவத்தை **[illegible]** **[illegible]** ஓர் ஸ்வப்னம் போல், ஊறிக்கொட்டிடுமே!

உமக்கு, கைமாறு செய்ய, எம் பொருளும் இல்லை! காரணம்? **உடல்! பொருள்! ஆவி** (உயிர்) ஆகிய இம் மூன்றையும், உமக்கு அர்ப்பணம் செய்தோம். அவை அனைத்தையும், உம் **ஞானக்கனி**யால், சாம்பவி ஆக்கி விட்டாய்!

எம் அறியாமையினால், மூடியிருந்த, ஜீவாத்மாவை, உமக்கு அர்ப்பணம் செய்தோம்! அதனையும், **ஜீவத்துவத்தை**! நாசம் செய்து அதை ஆன்மாவாக்கி **ஆன்மாவை** உன்னுடையதாக்கிக் கொண்டாய்!

(126) இனிமேல், கைமாறு என்ற பொருளோ! அதைக் கொடுக்க வேணும் என்ற **யாமோ**! அதை பெற்றுக் கொள்ளும், **நீயோ**! எந்த நாமரூபத்துடனும், **தனிமையாக**! இல்லையே தேவாதி தேவா!



உ

(101)

"அதுவே யாம்" "யாமே அது" என்றாகிலே, பரிபூரணமாகி விட்ட படியால்; பிரம்மானந்த சஞ்சீவியமாகிய "உம்மிடம்" "உப்புப் பதுமையென" இருந்த யாம், இச்சாதனையின் முதல், இரண்டறகலந்து விட்டோமே! ஆகவே "நமக்கு" அன்னியமாய், எதுவும் இல்லவே இல்லை ஐயா!

(127) அப்படியே, வாக்கிய விளக்கத்திற்காகவே, யாம் இதை குறிப்பிடுகிறேம்! இது உண்மையில் இல்லவே இல்லை!

எம்பிரபோ! யாம் கைமாறு என ஓர் பொருளை, உமக்கு கொடுத்தாலும், அது "உம்" பொருள்தானே?????

உம் பொருளை, உமக்கே கொடுப்பதற்கு "எமக்கு" என்ன யோக்கியதை இருக்கிறது????? அதுதான் சரி!

அப்படியே, யாம் கொடுத்தாலும், அதை பெற்றுக் கொண்ட "நீர் எங்கு போவீர்?????"

உமக்கும் இருப்பும், இயக்கமும் இல்லை! அதைப்போலவே, எமக்கும் இருப்பும், இயக்கமும் இல்லை! இதுநாம் இருவருக்கும், ஓர் "கேவலமாக" போய்விட்டதே! நீர் இனி பாடம் சொல்லவும் முடியாது! யாம் பாடம் கேட்கவும் முடியாது!



128 102

"ஸத்குருவாக" நீயும் இல்லை! "ஸத்சடைக்" யாரும் இல்லை!! நாம் இருவரும், நமக்கு நாமே ஏற்படுத்திக் (நம்இருவர்களும்) கொண்ட, இந்த "நாமரூபபொம்மைகளும்" இல்லவே இல்லை! "நாம்" (குருசீடன்) அதுவாகவே, முக்காலமும் எக்காலமும் இருக்கிறோம்!

முக்குணங்களால் தோன்றும், எந்தவித "பிரிவும்" இல்லை! அதற்கு ஆதாரமான, மூலமாயையும்! அதன்பொருளான, அவித்தையும்! "துர்க்குணமாக" தோன்றிய, ஜகத்துவம், அனைத்து ஜீவவர்க்கங்களும், அதன் கர்த்தாக்களான, திரிகர்த்தாக்களையும், மற்றும் அனைத்துமும், எந்த "நாமரூபத்துடனும்"! காணாமல் போய்விட்டதே! அனைத்தும், "வெய்யிலின் மஞ்சள்" எனப் போய்விட்டதே பாரமோ! (ஞானம்பிரகாசித்திறவ், அஞ்ஞான இருள் ஓடிவிட்டதே) (வெய்யிலில் மஞ்சள் நில்லாதது போல் எனக்கொள்க!)



(129) 

"இருமை" இல்லாமல், நாம் "ஒன்றான" தன்மையிலே, வணங்குதல், யாதும் இல்லை! அதை ஏற்கும், நீயும் இல்லை! வந்தனம்! வணக்கம்! இவை யெல்லாம் "பலன்" கருதி செய்யப்படுவதாகும்! "பலமும்" "பலனும்"! நாம் இருவரும், ஒன்றாகிட ஒன்றுபட்ட தன்மையிலே, வணங்க இடமே இல்லை! அதையும் மீறி யாம் வணங்கிறலே எம்மை தாங்கள், "அஞ்ஞானி!" யென சொல்லுவீர்கள்!

(130) எம் ஸ்ரீ ஸத்குரு, மஹிமையையும்; அவருடைய "ஸ்வயஞான அநுபவநூலை"யும் எப்படி புகழ்வது? இதற்கு வாக்கோ, வரியோ இல்லவே இல்லை! தன்னை அறியும் அறிவாகிய, "ஆத்மஞானத்தையும்"! அதை, ஸ்வயமாகவே உணர்ந்த, "ஞானியின்" பெருமையையும், எப்படி புகழ்வது? இதற்கு, வாக்கோ, வரிவடிவமோ, இல்லவே இல்லை! பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், சந்நியாசம், வானப்பிரஸ்தம்! ஆகிய இந்த, நான்கு ஆஸ்ரம தர்மங்களையும் கடந்தவரை அதிவர்ணாஸ்ரமி, எனச்சொல்லும், "ஸத்கு" தர்மத்தையும், அச்சாதுவின், பெருமையையும், எப்படி புகழ்வது? இதற்கு, வாக்கோ, வரிவடிவமோ, இல்லவே இல்லை!



(104)

"பிரம்மானந்தசுக" மஹிமையையும், அதை ஸ்வயமாக அடைந்த, "ஏகாந்த மஹிமையையும்"! எப்படி புகழ்வது? அதற்கு, வாக்கோ, வரிவடிவமோ, இல்லவே இல்லை!

(131) தற்காலிகமாக, இத்தேகத்தை இவ்வுலகிற்கு, கொடுத்த, அன்னையும் தந்தையும்! மற்றும் உள்ள பந்துக்களும், பிறவிப் பிணியை கொடுப்பார்களேயன்றி, பிறவிப் பிணியை, அறுக்கார்! ஆனால், ஆதி அந்தம் இல்லாத "ஸத்குருவாகிய" நாங்களோ, பிறவிப் பிணியை, அறுத்ததோடல்லாமல், பிரம்ம ஞானம் என்ற "அகண்டானந்தம்" அருளிவிட்டோர்கள்.

"வைராக்கியம்"!

(132, 133, 134.) ஹே குருதேவா! எந்த "உபாதை"யும், இல்லாத, "விதேக முக்தி" அடையும் வரை, ஜீவன் முக்தி பெற்றுவிட்ட "யாம்"! பிராரப்தமோ, அல்லது, அது முடிந்த பின்னும், "பரகதியோ"! யாம் அறியோம்! யாம் அறிய தேவையும் இல்லை!



(105)

சில "பக்குவ ஆன்மாக்களின் நிமித்தம், இத்தாவ சஞ்சாரம், நடைபெற வேண்டியுள்ளது! அக்காலங்களில் இத்தாவத்திற்காக "உணவு உடை இருப்பிடம்" ஆகிய, இம்மூன்றையும், ஏற்க வேண்டும்! அப்படி ஏற்கும் கால், விருப்பும், வெறுப்பும் இல்லாமல் "யதேச்சையாக" எம்மை, தேடி நாடி ஓடி வருவதை மட்டும் "ஈஸ்வரார்ப்பணமாக"! ஏற்போம். அதன் காரணம் :— ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள், "சுத்த பொய்"! என பிரமாணமாக, சொல்லிவிட்டு, இப்போது, ஈஸ்வரார்ப்பணமாக, ஏற்போம் எனச் சொன்னால், முரண்பாடாக தோற்றுகிறதா? இதைச் சற்று கவனிக்கவும் :- ஓர் ஞானி தாவ சஞ்சார காலங்களில், உணவு உடை இருப்பிடம், ஆகிய இம்மூன்றும், நாமரூப ஜகத்திடம் இருந்து, நாமரூப உடலுக்கு, ஏற்கும் நிர்ப்பந்தம், ஏற்பட்டு விட்டது! இம்மூன்றுமே, ஈஸ்வராதிகளின், சிருஷ்டியாகவும், இயக்கமாகவும், இருக்கிறது என்பது, வியவகார ஸத்தியமே! ஆனால் உண்மை இல்லை.





ஆகவே உடையானும், இருப்பிடத்தானும்

எவ்வித "தோஷமும்"!

ஏற்படாது காரணம் அவை இரண்டும்

புறத் தோற்றம்! புறச் செயல்! புற அனுபவம் மட்டும்

ஆனால், ஆகாரம் அப்படி அல்ல! ஆகாரம், சுட்டுகிறது.

உள்ளே செல்கிறது! உள்ளே செயல்படுகிறது! உள் அனுபவம்!

இவை எல்லாவற்றிற்கும், மேலாக, ஆகாரம் ஒன்றே

"மனதின் குணசம்பந்தம்" என

ஆகிவிட்டதும் இக்குணங்கள், பரிசுத்தமாக இருக்க வேண்டு

மானால், அது வந்த இடமாகிய, மாயாவின் அதிபதிகளான,

ஈஸ்வராதிகளே, இடம் பெறுகின்றனர். ஆகவே ஆகாரத்

தின், உட்கொள்ளும்போது, ஈஸ்வராதிகளின் சர்வார்ப்ப

ணம், தேவைப்படுகிறது! மேலும் பழக்கமும்!

(அனைத்து வார்த்தைகளும்) வழக்கமும்!!

(அனைத்து செய்கைகளும்) பக்குவ அபக்குவ, ஆன்மாக்கள்

"வசமே" இருப்பதால், இப்பழக்க வழக்க தோஷம்,

நீடிக்காமல் இருப்பதற்காக, இக்கலியுகத்திற்கு மட்டும்,

"அகம்பிரம்மம்!"

என்ற, நானே அது! அதுவே நான்! என்ற "பிரம்மாண்ட

பாவனை! தாவம் மறையும் பரியந்தம், தேவைப்படுகிறது!





"பர ஒலியும்! இறை செயலும்!" முறையே, ஓர் ஸ்பீக்கர் ஆகவும், பொம்மலாட்டமாகவும்; நடைபெறுவதால், அதாவது; ஒலியானது பரசம்பந்தமாகவும்; செயலானது ஸ்ரீபகவான் செயலாகவும்; செயல்படும் காலங்களில்; எம் "பர இறை கருணை" இயக்கத்திலே; செயல்படும் போது, பக்குவ ஆன்மாக்களும்! அபக்குவ ஆன்மாக்களும்! அவர்களுக்குரிய, அனுபவத்திலே; முறையே, "போற்றலும்! "தூற்றலும்!! நடைபெறுவது சகஜமே! அது காலங்களில், அவைகளை விகார! விவகாரம்! இல்லாமல் "புஷ்பாஞ்சலியாக"! அவைகளை, ஆனந்தமுடன், ஏற்றுக்கொள்வோம்! இனி எம் இயக்கம், எப்படி இருக்கும் என்றால்???

1. உணவு, உடை, இருப்பிடம், இவைகளை ஈஸ்வரார்ப்பணமாக ஏற்போம்!
2. அகம்பிரம்மம்; பிரம்மம் அகம்! அதாவது நாம் அது அதுவே நாம் என்ற, பிரம்மாண்ட பாவனையால், சஞ்சாரம் செய்வோம்.
3. போற்றலும், தூற்றலும், புஷ்பாஞ்சலியாக, ஆனந்தமுடன் ஏற்றுக்கொள்வோம்!

ஓர் ஞானியின், ஜீவசஞ்சார காலங்களில், மேலே கூறிய, "மௌனம்" அவசியம் வேண்டும். இதுவே, ஓர் ஞானியின், வைராக்கியமாகும்!



(108)

எம் "ஆனந்த ஆத்ம நாதா"! ஸத்குரு வாரியா!

நீயே எம் "அறிவின்" தந்தை!

நீயே எம் "அன்பின்" தாய்! நீயே எம்

அதிசயிக்கத்தக்க "பந்து"! நீயே எம் நண்பன்!

"நீயே எம் ஸத் குரு"!!!!!

அதிசயமாம் பந்து :— உலக நிலையில் உள்ள, உறவு, சுற்றம், நட்பு இவைகளின், "பந்துக்கள்"! இரும்பினால் ஆன பந்துபோல், ஜனன மரண, புதை சேற்றினுள், அழுத்தி நாசம் செய்வர். ஆனால், ஸத்குரு என்பவர், "தெய்வம்மனுஷ்யரூபம்"! என்ற நிலையில், அனைத்துமாய் இருந்து கொண்டு, "கேஸ்" அடைத்த ரப்பர் பலூன் போல் (பந்து போல்) "உயர்வான நிலையில்" ஆகாயத்தில் கொண்டு செல்வது போல, அரவணைத்து, கொண்டு சென்று, "பரத்தில்" சேர்த்துவிடுவார்! ஆகவே ஸத்குருநாதர்! இருவரையே அதிசயமாம் பந்து என குறிப்பிடுகிறார்!



"ஸத்சிஷ்யாள்" ப்ரார்த்தனை!

"ஸ்ரீபகவத்" சொரூபமும்;

"ஸ்ரீஸத்குரு" சொரூபமும்;

இணைந்து "ஒன்றான!" "ஹே" பரம்பொருளே!

இந்த கோரமான, கலி தோஷ காலத்தில்,
எங்களை, தோன்றச் செய்து, எங்கள், பூர்வ புண்ணியத்
தாலும்! ஸ்ரீமஹான்களின், ஆசியாலும்! ஸ்ரீபகவான்,
கருணையாலும்! உன் அம்ஸ "ஸத்குருவை"!
காட்டி, உணர்த்தி அருளினாய்! அது நாங்கள் செய்த,
பெரும் பாக்கியமே! ஆனாலும்? ஹே கருணைக்கடலே!
நாமரூப ஜகம்! இல்லை! இல்லை!! இல்லை!!! என்று நாங்கள்
படித்தாலும்; சொன்னாலும்;
பாடம் கேட்டாலும்; சொந்தம்; பந்தம்; உறவு;
பொன் (பணம்) பெண் (காமம்) மற்றும் அனைத்து
"மோஹ வஸ்துக்களும்!"
எங்களை பய முறுத்தி, பாடாய் படுத்துகிறதே ப்ரபோ!
என் செய்வோம் ஐயா??? "கலியின்" தாவ
இயக்கத்தால், "ப்ரபஞ்ச உபாதைகளி
ளையும்!" கசக்கி, பிழியப் படுகிறோம்!!!!!



உ



மன நடுமாற்றத்தால், ஸ்ரீபகவத் பாவனையோ பிரம்மான்ம பாவனையோ, நிலைத்து நில்லாமல்

"சலிப்பினை" சஞ்சலமும்!

"கலக்க சந்தேகத்தால்" பயதுக்கமும்!!

அடிக்கடி தோன்றி எங்களை அலைக்கழிக்கிறது "இது நீ அறியாததா?"

பர கருணையின் நிலையில், கொஞ்சம் கருணை காட்டலாமே! உன்னால் முடியாதது எதுவும் இல்லையே! உன்னால் முடியும்!!

ஆனாலும், "உன் நிலையில்! நீ செயல்பட முடியாததேன்?

எங்கள் "ஸத்குரு" நிலையும், உன் நிலை தான்??

ஆனாலும், செயல்படும் "ஸ்ரீபகவானாக" இருந்து செயல்படலாமே??? உம்முடைய, ஸ்ரீபகவான் நிலையில், இருந்து நீர் செயல்பட்டால், அங்கு, வினையின் நிலை என்ன?

மனதின் இயக்கம் என்ன?? விதியின் சக்தி என்ன??? என

உன் கணக்கின் நிலையில்; பல கேள்விகள் வரலாம்! "வினையோ? மனமோ?? விதியோ???"

உன்னிலை இல்லால் அலை எங்கிருந்து வந்து ஆடினாலும் நீயே!

ஆகவே இவை ஒன்றும் நாங்கள் அறியோம்? நீ என்ன செய்வாயோ? ஏது செய்வாயோ?? எப்படி நடத்துவாயோ??? நாங்கள் அறியோம்! அறியவும் தேவையில்லை!!



111

பிரமாணமாகச் சொல்கிறோம்!

நாங்கள் அனைவரும்

"ஜீவன் முக்தர்களே"!

இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

ஹே பிரபோ! இவ்வாசகங்களை கண்டதும் உனக்கு சிரிப்பு வருகிறதா? உன் குழந்தைகளான யாம், வந்தனம் செய்யும்!

எங்களுக்கு, ஏது "பயம்? கவலை??"

நீ எது செய்தாலும், நன்மையே செய்வாய்! தீமை செய்யாய்! தீமை உன்னிடம் இல்லை!

இக்கலி தோஷ, கோர குணங்களில்!!!

"பாதிப்பு" அடைவதும் நீயே!!!

"பலம்" இருப்பதுவும் நீயே!!!

"பயன்" பெறுவதும் நீயே!!! உமக்கன்னியம் யாம் இல்லை! எமக்கன்னியம் எதுவும் இல்லை! ஹே கருணா ஸாகரா!

கருணைக்கடலே! தயாஸிந்து! கிருபாநிதியே! ஆனந்த ஸாகரா! பிரம்மானந்த சமுத்திரமே! பூரண சொரூபமே! சரணாகத வத்ஸலா! அபயம்! அபயம்!! அபயம்!!! என எங்களை முழுதும் கொண்டோம்! நாங்கள் இனி இல்லை!

எல்லாம் நீயே! எல்லாம் நீயே!! எல்லாம் நீயே!!!

எல்லாம் ஒன்றே! அது நவமே!

அது சிவமே!

அதுயானே! அது நீயே! இதுவே ஐக்கியம்!!!

பாபா.



||உ

"ஸத்குரு ஸந்தானம்!

குரு பிரம்மா! குரு விஷ்ணு!

குரு தேவோ, மஹேஸ்வரஹ!

குரு சாக்ஷாத் ஸ்ரீ

"பரப்பிரம்மம், தஸ்மை குருவே"

"ந" "ம" "ஹ"!!

சிருஷ்டி கர்த்தாவும், காக்கும் கர்த்தாவும்,

மாற்றமும், நிலையறிந்து, மறைக்கும், கர்த்தாவும்,

"ஜீவ ரக்ஷயின்! தொழில்

கர்த்தாக்களாக, இவையே இவை! அவர்கள்

மூவரும், "ஜீவ அழியின்"! நிலையில்,

"ஸத்குருவாக! "இருக்கிறார்கள்!


என்பதே ஸத்தியம்! ஆகவே அனைவரையும்,

"பரசொரூப ஸத்தியயின்"!

ஸத்குரு சொரூபமாகவே, போற்றி பணிகிறோம்!

"எல்லாம் நலமே! எல்லாம் நலமே!! எல்லாம் நலமே!!!

அதுயாமே! அதுநீயே!!" — தவ பாபா


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!